புதன்பொய்கை



டெங்குத் தொற்று;
மக்களுக்கு
எச்சரிக்கை
விரிவு பக்கம்:-05

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 63

புதன்கிழமை
28 ஜனவரி 2026

தை 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

பெப்ரவரி 2ஆம் திகதியன்று

## கிவுல் ஓயாவுக்கு எதிராக போராட்டம் நடத்த முடிவு



வவுனியா, ஜனவரி 28

**தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிரமித்து, வடக்கின் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கில் செயற்படுத்தப்படவுள்ள கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக, வவுனியாவில் எதிர்வரும் 2ஆம் திகதி பெரும் போராட்டமொன்றை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.**

»15

நிதி முறைகேடு விவகாரம்

## விசாரணைகளை எதிர்கொள்ள அவகாசம் கோரினார் ஷிரந்தி!

கொழும்பு, ஜன. 28
பொலிஸ் நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவால் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ச, விசாரணைகளை எதிர்கொள்வதற்கு அவகாசம் கோரியுள்ளார்.
மஹிந்த ஆட்சிக்காலத்

»15

சிவராத்திரி தினத்தன்று

## திருக்கேதீஸ்வர ஆலயத்தில் 5 லட்சம் பக்தர்கள் திரள்வர்!

மன்னார் மாவட்டச் செயலர் தகவல்

மன்னார், ஜன. 28
சிவராத்திரியை முன்னிட்டு, மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் 5 லட்சம் பக்தர்கள் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்குரிய முன்னாயத்த நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன - இவ்வாறு மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன்

»15

நம்பிக்கையில்லாப் பிரேரணை:

## எதிர்க்கட்சிக்குத் துணிவில்லை!

நளிந்த காட்டம்

கொழும்பு, ஜன. 28
பிரதமர் ஹரிணிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரும் துணிச்சல் எதிர்க்கட்சிக்கு இல்லை என அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.
இது தொடர்பில்

»15

## குளவிக் கொட்டுக்கு இலக்காகி உதவிக்கல்விப் பணிப்பாளர் பலி

அவருடைய மகனுக்கும் தீவிர சிகிச்சை



முல்லைத்தீவு, ஜன. 28
துணுக்காய் வலயக்கல்வி அலுவலக ஆரம்பப் பாடசாலை உதவிக்கல்வி பணிப்பாளர் அன்ரனி ஜோர்ஜ் (வயது-53) குளவிக்கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.
யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த அவர், பணி நிமித்தம்

»15

## கச்சதீவுப் பெருவிழாவுக்கு துரிதகதியில் ஏற்பாடுகள்!

யாழ். மாவட்டச் செயலகத்தில் முன்னாயத்தக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 28
பெப்ரவரி மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில்

»15



## காணிகளற்ற மக்களை வதைப்பதை நிறுத்துக!

புதுக்குடியிருப்பு பிரதேசசெயலருக்கு எதிராகப் பொதுமக்கள் போராட்டம்

முல்லைத்தீவு, ஜன. 28
அரச காணிகளில் குடியிருக்கும் மக்களுக்கு எதிராக, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகம் சட்ட நடவடிக்கை மேற்கொள்கின்றது. மக்களை வதைக்

»15

கட்டாக்காலி மாடுகளால் வினை

## கூலர் - ஜீப் விபத்து நால்வர் படுகாயம்!



வவுனியா, ஜன. 28
வவுனியா - செட்டிகுளம் பகுதியில் கூலர் - ஜீப் என்பன நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளானதில், நால்வர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

»15

"ரண்டு பகுதியும் தங்கட பக்கம்தான் சரியெண்டு சொல்லி நிண்டால் காடுதான் இனி உண்மை என்னவெண்டு சாட்சி சொல்லோணும் கண்டியளோ"

பெண் தலைமைத்துவ

## 1,000 குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்புகள்!

கிளிநொச்சியில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 28
வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கி, ஆயிரம் பெண் தலைமைக் குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கும் செயற்றிட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது.
இது தொடர்பில் வடமாகாணசபையின் முன்னாள்

»15

## கேப்பாபிலவு காணிகளை உடன் விடுவித்துத் தருக!

முல்லைத்தீவு, ஜன. 28
முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதியில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவித்துத் தருமாறு, காணிகளின் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

»15

## அடாத்தாக காடுகளை வெட்டி காணி பிடிப்போருக்கே நடவடிக்கை

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் விளக்கம்

முல்லைத்தீவு, ஜன. 28
புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பகுதியில், அரச காணிகளில் குடியிருக்கும் மக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாறாக, சட்ட விரோதமாக ஏக்கர் கணக்கான காடுகளை அழித்து காணி பிடித்தவர்களுக்கு எதிராகவே நடவடிக்கை இடம்

»15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 27.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4329 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 41 48 54 75 |
| விசேட எழுத்து | D |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 27.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1396 |
| வெற்றி இலக்கிளம் | தனுஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 09 37 43 53 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 27.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0355 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 7 2 0 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 27.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2435 |
| ஆங்கில எழுத்து | Z |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கங்கள் | 07 33 42 73 |

| மஹாஜன சம்பத | |
|---|---|
| திகதி | 27.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6087 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 9 2 7 0 7 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 27.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2117 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 41 63 75 81 |
| விசேட எழுத்து | T |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 27.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0203 |
| வெற்றி இலக்கிளம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 27 33 44 |

# தீர்வுகள் வழங்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கைகள்!

*ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் எச்சரிக்கை*

கொழும்பு, ஜன.28

**பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாவிட்டால் சட்டரீதியாக உரித்துள்ள தொழில்சார் உரிமைகளுக்கு அமைய தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுக்கநேரிடும் என்று ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.**

அந்தச் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது ரயில்வேதிணைக்களத்துக்குள் தொடர்ந்து நிலவும் நிர்வாக வினைத்திறனின்மை காரணமாக, பயணிகள் மட்டுமன்றி ரயில் ஊழியர்களும் கடும் சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

ரயில் நிலைய அதிபர்களைச் சேர்ப்பது மற்றும் பதவி உயர்வு தொடர்பில் அவசியமான ஆட்சேர்ப்பு நடைமுறை தொடர்பான இடைக்கால ஏற்பாடுகளைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவது தொடர்ந்து தாமதப்படுத்தப்படுகின்றது. இது ரயில் நிலைய அதிபர்களின் கடமை வினைத்திறனிலும், ஊழியர்களின் மனநிலையிலும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் அனர்த்தக்கடன் 4 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், ரயில்வே திணைக்களம் அந்தத் தொகையை 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவாகக் குறைத்து வழங்கத்தீர்மானித்திருப்பது பாரதூரமானது.

ரயில் சேவையை முறையாகத் திட்டமிடாமை, கால அட்டவணைகள் சீர்குலைவு மற்றும் செயற்பாட்டுப் பலவீனங்கள் காரணமாக நாளுக்கு நாள் பயணிகள்கடும்சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். இதற்கு திணைக்கள நிர்வாகமே நேரடியாகப் பொறுப்புக்கூறவேண்டும்- என்றுள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 27.01.2026 | செவ்வாய்க்கிழமை | 0795 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| F | 0 8 0 2 2 3 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.01.2026 | செவ்வாய்க்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3061 | L | 34 62 73 77 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.01.2026 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| W | 38 44 61 73 | 5222 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 27.01.2026 | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0891 | 22 35 48 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.01.2026 | செவ்வாய்க்கிழமை | |
| கன்னி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 05 06 16 59 | 4773 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 27.01.2026 | செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Y | 09 | 09 55 63 68 | 2237 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.01.2026 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| S | 10 20 40 57 | 2887 |

## ஜே.வி.பி.யின் சுபாவம் தற்போது வெளுக்கிறது

*ஹர்ஷன ராஜகருணா எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, ஜன.28

ஜே.வி.பி.யின் உண்மையான சுபாவம் இப்போதுதான் வெளிப்படுத்தப்படுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

பௌத்த மதகுருமார் காவி உடை அணிந்திருந்தாலும், சட்டத்தரணிகள் கறுப்பு மேற்சட்டை அணிந்திருந்தாலும் தம்மை எதிர்த்தால் தாக்குதல் நடத்துவோம் என்று அரசாங்கம் கூறுகின்றது. ஜே.வி.பி.யின் அராஜக கலாசாரம் தற்போது அரங்கேறிக்கொண்டிருக்கின்றது. 1980ஆம் ஆண்டுகளில் தமது அரசியல் கொள்கைகளைக் கடைப்பிடிக்காதவர்களை இவர்கள் இவ்வாறு தான் கொன்று குவித்தனர். அதையே தற்போது அமைச்சர் லால் காந்த மீண்டும் நினைவுபடுத்துகின்றார். திருகோணமலையிலும் பௌத்த பிக்கு ஒருவர் தாக்கப்பட்டது மாத்திரமின்றி, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இதுவே ஜே.வி.பி.யின் கலாசாரம் - என்றார். (எ-இ)

எக்ஸ்பிரஸ் பேர்ள் விபத்து

## உள்நாட்டு முகவர்களுக்கு வெளிநாட்டுப் பயணத்தடை

கொழும்பு,ஜன.28

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பாக, அந்தக் கப்பலின் உள்நாட்டு முகவர் நிறுவன இயக்குநர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கொழும்பு நீதிவான் நீதிமன்றம் மற்றும் கொழும்பு மேல் நீதிமன்றம் ஆகியவற்றால் இந்த வெளிநாட்டுப் பயணத்தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளார். (ச)

## ஆசிரியர்மீது தாக்குதல்

மட்டக்களப்பு, ஜன.28

வாழைச்சேனை, ஓட்டமாவடி பிரதேசத்தில் பாடசாலை ஆசிரியர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளார். வாக்குவாதம் தீவிரமடைந்ததையடுத்தே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## பருத்தித்துறையில் பெப்.1 முதல் 'லஞ்ச் சீற்' முற்றுமுழுதாகத் தடை!

*மீறினால் சட்ட நடவடிக்கை*



யாழ்ப்பாணம்,ஜன.28

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் 'லஞ்ச் சீற்' பயன்பாடு முற்றுமுழுதாகத் தடை செய்யப்படுவதாக நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் அறிவித்துள்ளார்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், வீடுகளில் நடைபெறும் வைபவங்கள் மற்றும் அனைத்துப் பொது நிகழ்வுகளுக்கும் இந்தத் தடை பொருந்தும்.

1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் சட்டம் மற்றும் நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின்கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைத்தல், திண்மக்கழிவு முகாமைத்துவத்தைச் சீர்செய்தல் மற்றும் பொதுமக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்தல் என்பவற்றின் அடிப்படையில் இந்தச் செயற்பாடு நடைமுறைக்கு வருகின்றது. உணவு கையாளும் நிலையங்களில் பொதியிடல் நடவடிக்கைகளுக்காக ஏற்கனவே வழங்கப்பட்ட மூன்று மாத கால அவகாசம் முடிவடைந்து, கடந்த ஜனவரி 1 ஆம் திகதி முதல் தடை நடைமுறையிலுள்ளது.

தற்போது பொது நிகழ்வுகளுக்கும் இந்தத் தடை விரிவாக்கப்பட்டுள்ள நிலையில், இதனை மீறுபவர்களுக்கு எதிராகத் தராதரமின்றிச் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நகரசபை எச்சரித்துள்ளது. (ச-100)

## சட்டவிரோத மணல் கடத்தல்; சுன்னாகத்தில் இருவர் கைது

யாழ்ப்பாணம்,ஜன.28

அனுமதிப்பத்திரமன்றி சட்டவிரோதமாக மணல் கடத்தலில் ஈடுபட்ட இருவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது மணல் ஏற்றிவந்த டிப்பர் வாகனமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதனார்மடம் பகுதியில் வைத்து சுன்னாகம் பொலிஸாரால் இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ஒரு டிப்பர் தப்பித்துச் சென்றுள்ளது.

குறித்த மணல் கிளாலிப் பகுதியில் இருந்து சட்டவிரோதமாக எடுத்துவரப்பட்டபோதே இந்தக் குற்றச்செயல் முறியடிக்கப்பட்டது. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டித்வாவால் பாதிக்கப்பட்ட

# சிறு, நடுத்தர வர்த்தகத்தை மீள ஆரம்பிக்கக் கடன்கள்!

**கொழும்பு, ஜன.28**

**'டித்வா' புயலால் பாதிக்கப்பட்ட நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நடவடிக்கைகளை விரைவில் மீள ஆரம்பிப்பதற்குத் தேவையான நடைமுறை மூலதனக் கடன்களை வழங்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.**

கடந்த மாதம் 16ஆம் திகதி முதல் மூன்று அரச வங்கிகள் ஊடாக இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தனியார் வங்கிகள் உட்பட மேலும் 13 வங்கிகள் இந்தக் கடன்களை வழங்குவதற்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட விருப்பம் தெரிவித்துள்ளன என்று நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தி நிதியியல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக பூச்சிய வட்டிக்கு வங்கிகளுக்குப் பணம் வழங்கப்படுகின்றது என்றும், வங்கிகள் மூலம் 3 வீத வட்டி வீதத்தின்கீழ் 25 மில்லியன் ரூபா வரை கடன் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதேநேரம் நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை மீள வலுப்படுத்துவதற்கான கடன் வசதியின் கீழ், 25 மில்லியன் ரூபா வரை 5 வீத வட்டிக்கு அனைத்து அரச மற்றும் தனியார் வங்கிகள் ஊடாகக் கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

விவசாய சமூகத்தின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும், மொத்தத் தேசிய உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்களிப்பை அதிகரிப்பதற்கும் கடன் வசதிகளை வழங்கும் நடவடிக்கைகள் அடுத்த மாதத்தின் இரண்டாவது வாரத்திலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## காசல் வீதி மருத்துவமனையில் விரைவில் 'ஐ.வி.எப்.' சிசிச்சை

கொழும்பு, ஜன.28

கொழும்பு காசல் வீதி மகளிர் மருத்துவமனையில் மிக விரைவில் சோதனைக்குழாய் கருத்தரிப்பு சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று அந்த மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் அஜித் குமார தந்த நாராயண தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய வசதிகள் இன்னும் மூன்று மாதங்களுக்குள் செயற்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. தனியார் மருத்துவமனைகளில் இந்தச் சிகிச்சையைப் பெறமுடியாத தம்பதிகளுக்கு, பொதுச் சுகாதாரத் துறையினூடாக ஒரு நியாயமான வாய்ப்பை வழங்குவதே இதன் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது. தற்போது இலங்கையில் ஒரு சில தனியார் மருத்துவமனைகளில் மட்டுமே இந்தச் சேவை உள்ளது. ஒரு முறை சிகிச்சைக்கு 2 மில்லியன் முதல் 3 மில்லியன் ரூபா வரை செலவாகிறது. (எ-இ)



## அதிக இலாபமீட்டியது கூட்டுறவுக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜன.28

கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திப் பொருள்கள் கண்காட்சியால் அதிக இலாபம் கிடைத்துள்ளதாக சங்கங்கள் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில், யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கண்காட்சி மற்றும் விற்பனை 3 தினங்களாக இடம்பெற்றன.

இந்தக் கண்காட்சியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது உற்பத்திகளைக் காட்சிப்படுத்தியிருந்தன. கண்காட்சியை அதிகளவானோர் பார்வையிட்டதோடு. உற்பத்திப் பொருள்களும் அதிகளவு விற்பனை செய்யப்பட்டன. (க-17)

## பெண் கான்ஸ்டபிள் ஹெரோய்னுடன் கைது

கொழும்பு,ஜன.28

ஹெரோய்ன் போதைப் பொருளுடன் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் அம்பகஸ்தொவ பொலிஸாரால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் பதுளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவராவார்.

அவரிடமிருந்து 4 கிராம் 2 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மற்றும் 26 ஆயிரம் ரூபா பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)



## உயிர்த்தியாகி முத்துக்குமாரின் 17ஆம் ஆண்டு நினைவு!

ஈழப்போரை நிறுத்தக்கோரி தீக்குளித்து உயிர்நீத்த 'வீரத்தமிழ் மகன்' முத்துக்குமாரின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நாளை வியாழக்கிழமை சென்னை கொளத்தூரில் நடைபெறவுள்ளது. ஈழத்தமிழர்களுக்காக உயிர்த்தியாகம் செய்த 27 ஈகியர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள மலர்த்தூணுக்கு முத்துக்குமாரின் சகோதரி தமிழரசி மலர்வணக்கம் செலுத்தி நிகழ்வைத் ஆரம்பித்து வைப்பார். 1982ஆம் ஆண்டில்பிறந்த முத்துக்குமார் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பத்திரிகையாளர் மற்றும் கவிஞர். 2009ஆம் ஆண்டு ஈழத்தில் நடைபெற்ற இறுதிக்கட்டப்போரின்போது, அங்குள்ள தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்தும், உடனடியாகப் போரை நிறுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தியும் தீக்குளித்து உயிர்நீத்தவராவார். (ச-100)




## கைவிரிக்கினம் கவுண்டரில!

'பில்லைக்' கண்டால் கரண்டைக் காணோம், 'பில்லைக்' கட்டப் போனாலோ ஆக்களைக் காணோம் எண்ட நிலைமையிலதான் யாழ்ப்பாணச் சனம் இருக்குது. இப்பத்தைய நிலைமையில ஒரு மாச கரண்ட் பில்லைக் கட்ட மறந்தாலே அவ்வளவுதான். மின்சாரசபைக்காரர் 'வெட்டுக்கிளி' மாதிரி பறந்து வந்து கரண்டைக் 'கட்' பண்ணிப்போட்டுப் போய்க்கொண்டே இருப்பினம். இப்பிடித்தான் கிட்டடியில 'கரண்ட் பில்லைக் கட்டாட்டித் துண்டிப்பம் உடன போய்க் காசைக் கட்டுங்கோ' எண்டு ஒரு வீட்டுக்கு போனில மெசேஜ் வந்திருக்கு. அந்த வீட்டில இருக்கிறதோ வயசான ஆக்கள். அவையளுக்கு இந்த ஒன்லைன், கின்லைன் ஒண்டும் தெரியாது. போஸ்ட் ஒப்பீஸ்ல கட்டினால் அது மின்சாரசபையின்ர சிஸ்டத்துல அப்டேட் ஆகிறதுக்கு நாள்பிடிக்குமாம். அது அப்டேட் ஆகிறதுக்குள்ள மின்சாரசபைக்காரர் வந்து கரண்டைக் கட் பண்ணின கன சம்பவங்கள் ஏற்கனவே நடந்துமிருக்கு.

அதாலை அந்த வீட்டுக்கார ஐயா, மக்கள் வங்கியில போய் கால் கடுக்க கவுண்டருக்கு முன்னால கியூவில நிண்டு, தன்ர முறை வர காசையும் பில்லையும் குடுத்திருக்கிறார். ஆனால், "இஞ்ச கவுண்டர்ல கரண்ட் பில் கட்டேலாது, வெளியில இருக்கிற மிசின்ல கட்டுங்கோ" எண்டு அவை சொல்லிட்டினம். இவருக்கு அந்த மிசினிலையும் காசு கட்டத் தெரியாது. அதால ஒரு ஓட்டோவைப் பிடிச்சு, யாழ்ப்பாணத்தில இருக்கிற மின்சாரசபையின்ர தலைமைக்காரியாலத்துக்குப் போயிருக்கிறார்.

அங்க போய்ப் பார்த்தால், காசு கட்டுற கவுண்டர் 'ஈ' ஆடுது! என்ன ஏதெண்டு விசாரிச்சால் அங்க வேலை பார்த்த ரெண்டு பேரில ஒருத்தர் வெளிநாடு போயிட்டாராம், மற்றவாக்கு 'பிள்ளை கிடைச்சிருக்கு' எண்டு லீவுல நிக்கிறாவாம், அதால காசு கட்டிற கவுண்டர் பூட்டு. பிறகு அவர் திரும்பி ஓட்டோவில மக்கள் வங்கிக்கு வந்து அங்க நிண்ட தெரிஞ்ச பெடியனைக் கெஞ்சிக் கூத்தாடி, அவனைக் கொண்டுவிச்சுத்தான் மிசினில கரண்ட் காசைக் கட்டினவர். இல்லாட்டி அண்டைக்கு அவரின்ர வீட்டில 'கரண்ட் 'வெட்டுப்பட்டிருக்கும். அநுர என்னெண்டால் கரண்டை 'அத்தியாவசிய சேவை' எண்டு 'கெஸட்' பண்ணுகிறார். ஆனால் மின்சாரசபைக்காரரோ, தங்கட ஒப்பீஸின்ர முக்கியமான பகுதியான காசுகட்டுற கவுண்டரில இருந்த ரண்டுபேரும் லீவெண்டால், அந்த இடத்துக்கு வேற ஆக்களைப் போடாமல் 'அவை ரண்டு பேரும் லீவு' எண்டு கைவிரிக்கினம். அவைக்கென்ன, ஏசிக்குள்ள காலாட்டிக்கொண்டு இருப்பினம். ஆனால் அப்பாவிச் சனமெல்லோ ஆத்துலையுது. உந்த மின்சாரசபைக்காரர் பாய்ஞ்சு பாய்ஞ்சு கரண்டைக் கட் பண்ணிறதில காட்டுற வேகத்தை, காசு கட்டிற கவுண்டரில ஆக்களைப் போடுறதிலையும் காட்டினால் என்னவாம்?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் மாவட்டம் வடமராட்சி பருத்தித்துறை தும்பளை நெல்லண்டை

# ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

## புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ சமர்ப்பண கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2026

திருச்சிற்றம்பலம்
நாடு மிகவுடையாள் நெல்லண்டை எம் பதியுறைவாள்
சாடும் வினைகள் தகர்த்திடும் சால்புடையாள் - பீடுடைய
தக்கன் செய் மமதை வேள்விதனை மாய்த்திடும்
மிக்க மதி நலத்தாள் மலர்ந்தாள் சரண்.
திருச்சிற்றம்பலம்

| கர்மாரம்பம் | எண்ணெய்க்காப்பு | கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 28.01.2026 புதன் காலை 07.53 மணி முதல் | 29.01.2026 வியாழக்கிழமை காலை 08.00 மணிமுதல் மாலை 03.00 மணிவரை | 30.01.2026 வெள்ளிக்கிழமை காலை 07.32 - 08.06 மணி வரை |

அன்பாளின் பக்த அடியார்களே!

இந்துமா சமுத்திரத்தின் மத்தியில் முத்தாக திகழும் இலங்காபுரியின் வடபுலத்தே சைவத்தமிழ் பாரம்பரிய கலை கலாச்சார விழுமியங்கள் தன்னகத்தே கொண்ட யாழ்ப்பாணத்தின் வடமராட்சி தும்பளை நெல்லண்டை பதியில் இத்தி மரத்தடியில் அமர்ந்து இருந்து வேண்டுவார்க்கு வேண்டுவன எல்லாம் கொடுத்தருளும் அன்னை வீரபத்திரமாகாளியம்மனுக்கு நிகழும் சுபமங்களகரமான விசுவாவசு வருஷம் தை மாதம் 16ம் நாள் (30.01.2026) வெள்ளிக்கிழமை துவாதசி திதியும், திருவாதிரை நட்சத்திரமும், சித்தியோகமும் கூடிய காலை 07.32 - 08.06 மணிவரையுள்ள கும்ப லக்ன சுபவேளையில் எம்பெருமாட்டி வீரபத்திரமாகாளி அம்மனுக்கும் பரிவார தெய்வங்களுக்கும் திருக்குடமுழுக்கு மஹா சாந்தி நிகழ அம்பாளின் திருவுள்ளம் கொண்டருளி உள்ளதால் இப்புனித நன்நாளில் அடியார்கள் புனித சீலர்களாக வருகை தந்து பெரும் சாந்தியை தரிசித்து திருவருள் பெற்று சீரும் சிறப்பாக சகல ஸ்ஸ்வரியமும் இகபர சுகவாழ்வு வாழ எல்லோரையும் வருக வருக என்று அன்புடன் அழைக்கின்றோம்.

## கும்பாபிஷேக கிரியா பூர்வ நிகழ்வுகள்

தை திங்கள் 14ம் நாள் 28.01.2026 புதன்கிழமை

காலை 07.53 மணிமுதல் கர்மாரம்பம், விநாயக பூஜை, புண்ணியாகவாசனம், ஆச்சாரியவர்ணம், அனுக்ஞை, தனலஷ்மி, குபேர பூசை, திரவியசுத்தி, திரவிய விபாகம், பிரதிஷ்டா சங்கற்பம், கணபதி ஹோமம், பேரிடதாடனம், நவக்கிரக ஹோமம், கிராம சாந்தி, பிரவேசபலி, ரக்ஷோக்கன ஹோமம், திசா ஹோமம், வாஸ்து சாந்தி, மிருத் சங்கரணம் கங்கா தீர்த்தம், ஆதித்யாக்னி சங்கரணம், வீபூதி பிரசாதம் வழங்கல்.
மாலை 03.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு, அங்குரார்பணம், ரட்ஷாபந்தனம், நித்திய துவஜாரோகணம், கடஸ் தாபனம், கலா கர்ஷணம், சணஹோமம், யாக பூசை, நாவாக்னி விபர்ஜனம், பிரதான கும்பங்கள் யாக சாலைப் பிரவேசம், விஷேட பூசை, பூர்ணாகுதி, உபசார பூசை, வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம், ஆசாரி வஸ்திர சம்பாவனை,
முன் இரவு 07. 19 மணிமுதல் 08.06 மணிவரையுள்ள சிம்மலக்ன சுபவேளையில் தீபஸ்தாபனம், கோவாசம், தூபிஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம் நடைபெறும்.

தை திங்கள் 15ம் நாள் 29.01.2026 வியாழக்கிழமை

எண்ணைக்காப்பு 29.01.2026 காலை 08.00 மணிமுதல் மாலை 03.00 மணிவரை

காலை 08.30 மணிமுதல் விநாயகர் வழிபாடு, விஷேட சந்தி, நித்திய துவஜா ரோகணம் பூசை, யாகசாலைபிரவேசம், யாக பூசை, நாவக்னி பூசை, காயத்திரி ஹோமம், விஷேட திரவிய ஹோமம், சகஸ்ர நாம ஹோமம், பூர்ணாகுதி வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், வீபூதி பிரசாதம் வழங்கல்

மாலை 04.00 மணிமுதல் கணபதி பூசை விஷேட பஞ்சசௌவ்ய பூசை, பஞ்சாமிர்த பூசை, சோடஷ விம்ப சுத்தி பூசை, நித்திய துவஜா பூசை, யாகப்பிரவேசம், யாக பூசை, நவாக்னி பூசை, ஹோமம், திரிசதி நாம ஹோமம், மூர்த்தி விம்பசுத்தி அபிஷேகம், மூர்த்தி ரட்ஷாபந்தனம், பூர்வாங்க துவார பூசை, சாங்க சடத்துவ நியாகம், பரிவார பரிசாகுதி, நவகுண்ட பரிசாகுதி, பூரணாகுதி, விஷேட தீபாராதனை, வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், சிவாச்சாரியவஸ்திர சம்பாவாசனை வீபூதி பிரசாதம், வழங்கல்.

தை திங்கள் 16ம் நாள் 30.01.2026 வெள்ளிக்கிழமை

அதிகாலை 04.30 மணிமுதல் சித்தி விநாயகர் பூசை, புண்ணியாக வாசனம், நித்திய துவஜா பூசை, உபசார தீபாரதானை, சதுர் வேத ஹோமம், ஸ்தோத்திர கீர்த்தனை திருமுறை ராக தாள, சங்கு, செகண்டி, நர்த்தன சமர்ப்பணம். அனந்த கோடி நமஸ்காரம், அந்தர்பலி, பகிர்பலி, தானாதிகள், சர்வமங்கள வாத்திய ஹோச சகிதம் பிரதான கும்பம் புறப்பாடு, காலை 07.32 தொடக்கம் 08.06 வரையுள்ள சுபவேளையில் தூபி அபிஷேகம், மகா கும்பாபிஷேகம், திருக்கதவம் காப்பிடல், யாக உத்வாசனம், தசமங்கள தரிசனம், ஆச்சாரிய சம்பாவனை. ஆசியுரை, மகா அபிஷேகம், விசேட பூசை அன்னதானம், நடைபெறும்

## கும்பாபிஷேக குருமார்கள் விபரம்

விண்ணில் இருந்து அருள்ஆசி வழங்கும் நெல்லண்டை பத்திரகாளி அம்மன், வீரமாகாளி அம்மன், பரம்பரை பூசகர், ஆதீனகர்த்தா தேவஸ்தானாதிபதி அமரர் தியாக.சோமாஸ் கந்த ராஜாக் குருக்கள், அமரர் வே. இராமலிங்கக்குருக்கள் ஆசியுடன்

கும்பாபிஷேக பிரதமகுரு
"சிவாகம கிரியாமணி தேவிபூஜா துரந்தர்"
**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தனஞ்சயக்குருக்கள்**
(பரம்பரை குருக்கள், ஆதீன கர்த்தா பிரதமகுரு)
நெல்லண்டை பத்திரகாளி அம்மன், ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்)

"அம்பாள் நித்திய பூஜாதுரந்தரர்"
**சிவஸ்ரீ. இராம சுந்தரலிங்கக்குருக்கள்**
பிரதமகுரு ஆதினகர்த்தா நெல்லண்டை பத்திரகாளி அம்மன்

ஆலய நித்திய உதவி அர்ச்சகர்கள்
சிவத்திரு. சுந்தா. விபூசன் ஐயா
சிவத்திரு சுந்தர். திரிஷ்யந்த் ஐயா

சர்வபோதகாச்சாரியர்
சிவஸ்ரீ.பா.பாலமனோகர் குருக்கள்

நவகுண்ட குருமணிகள்
சிவஸ்ரீ.வே.யோகராசாக் குருக்கள்
சிவஸ்ரீ.வை.சிவராசாக்குருக்கள்
சிவஸ்ரீ.சி.குகராசாக்குருக்கள்
சிவஸ்ரீ.வை.இராமேஸ்வரக்குருக்கள்
சிவஸ்ரீ.பா.மனோகரக்குருக்கள்
சிவஸ்ரீ.இ.கிரிசாந்தக் குருக்கள்
சிவஸ்ரீ.ந.சிவதர்ஷக்குருக்கள்
சிவஸ்ரீ.சிவதாசக்குருக்கள்
சிவஸ்ரீ.முருகதாசக் குருக்கள்
சிவஸ்ரீ.வி.வித்தியாபரக் குருக்கள்
சிவஸ்ரீ.ச.கஜமுகக்குருக்கள்

வேதம்

சாதகாசிரியர்கள்
சிவஸ்ரீ. இ.கணேஸ்வரக் குருக்கள்
"சாதக சாகரம்"
சிவஸ்ரீ. பா. நரேந்திராக் குருக்கள்
சிவஸ்ரீ. பா.நகுலேஸ்வராக் குருக்கள்

உதவி அர்ச்சகர்கள்
சிவத்திரு.இ.கணேசலிங்கம் ஐயா
சிவத்திரு.பிரசன்னா ஐயா
சிவத்திரு.நி.நிமல்ராஜ் ஐயா (வல்லை)
சிவத்திரு.எ.எழில் ஐயா
சிவத்திரு.ஞா.துவாரகன் ஐயா (சங்கரத்தை)
சிவத்திரு.க.பவித்திரன் ஐயா

அருள் ஆசி வழங்கும் குருமணிகள்
சிவஸ்ரீ.சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்
சிவஸ்ரீ.வே.தியானந்தராசாக் குருக்கள்
சிவஸ்ரீ.கி.நயானந்த குருக்கள்

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவர்கள்
சிவஸ்ரீ சண்முகரத்தினக்குருக்கள்
(திருக்கோணமலை சிவன் கோவில்)
சிவஸ்ரீ திருஞானசம்பந்தக்குருக்கள்
சிவஸ்ரீ ச. பிரசன்னாக்குருக்கள்

| வர்ண வேலை | கட்டடவேலை | கூரை வேலை | சிற்பாசாரியார் | தெறோசோ பதித்தல் | ஒலி ஒளி அமைப்பு | சுவாமி அலங்காரம் | மங்கள வாத்தியம் |
|---|---|---|---|---|---|---|---|
| தரன் ஆட்ஸ் | செல்வக்குமார் தும்பளை | கி. விஜயராசா பொலிகண்டி | க. நதீஸ்கரன் அராலி | கி. மோகனசுந்தரம் | இ. பரமதாஸ் தும்பளை | வை. ரங்கேஸ்வரன் | சிவசுப்பிரமணியம் குழுவினர் |

குறிப்பு: கும்பாபிஷேகதினத்திலும் அதற்கு முன்னதாக நடைபெறும் கிரிகைகளிலும் கலந்து கொண்டு தங்களாலான சிவத்திரவியங்களை கொடுத்தும் அம்பாளின் இஷ்ட சித்திகளையும் பெற்று வாழ்வில் சீரும் சிறப்புடன் வாழ்வீர்களாக

தொடர்ந்து மண்டலாபிஷேகம் 45 நாட்கள் நடைபெறும்
"அம்பிகை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்"
சுபம்

இங்ஙனம்
தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்
பிரதமகுருக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## சுதந்திரதினமும் கரிநாளும்

இலங்கைத்தீவு பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடம் இருந்து விடுபட்டு எழுபத்தெட்டு ஆண்டுகளை நெருங்கும் வேளையிலும், வடக்கு-கிழக்குத் தமிழர் தாயகத்தில் 'சுதந்திரம்' என்பது வெறும் எழுத்தளவில் மட்டுமே இருக்கின்றது. இந்தநிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இம்முறையும் சுதந்திரதினத்தைக் கரிநாளாகப் பிரகடனம் செய்து, போராட்டங்களுக்குத் தயாராகி வருவது வெறும் ஒரு சடங்கு ரீதியான எதிர்ப்பு அல்ல; அது பல தசாப்தங்களாகத் தொடரும் இனவாத அடக்குமுறைக்கு எதிரான ஒரு கூட்டு மனச்சாட்சியின் வெளிப்பாடு. பெரும்பான்மைச் சமூகம் கொழும்பில் இராணுவ அணிவகுப்புகளுடனும் கொண்டாட்டங்களுடனும் தேசியக்கொடியை ஏற்றி மகிழும் வேளையில், தமது உறவுகளைத் தொலைத்து, நிலங்களை இழந்து, அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு தேசிய இனம் கறுப்புக் கொடியுடன் வீதியில் இறங்குவது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது.

சுதந்திரதினத்தைக் கரிநாளாகப் பிரகடனம் செய்வதற்குப் பின்னால் வலிமிகு காரணங்கள் அடுக்கிக் கிடக்கின்றன. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வீதிகளில் அமர்ந்து ஆயிரக்கணக்கான நாள்களைக் கடந்தும் அவர்களுக்குப் பதில் சொல்லத் தவறிய அரச இயந்திரம், வடக்கு-கிழக்கில் தொடரும் திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புகள் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியற்கைதிகளின் அவலம் என நீதியின் கதவுகள் தமிழர் தரப்புக்குத் தொடர்ச்சியாகத் திறக்க மறுக்கின்றன. இந்தச் சூழலில், அரசால் கொண்டாடப்படும் சுதந்திரம் என்பது தமிழர்களைப் பொறுத்தவரை ஒரு ஆட்சிமாற்றமே தவிர, அவர்கள் மீதான ஒடுக்குமுறையில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதையே இது உணர்த்துகின்றது.

இத்தகைய கரிநாள் போராட்டங்களின் மூலம் சில சாதகமான விளைவுகளைத் தமிழ்த்தரப்பு எதிர்பார்க்கமுடியும். குறிப்பாக, இலங்கை அரசாங்கம் சர்வதேசத் தளத்தில் தன்னை ஒரு ஜனநாயக நாடாகக் காட்டிக்கொள்ள முற்படும் வேளையில், ஒரு தரப்பு மக்கள் சுதந்திரத்தை மறுத்து வீதியில் நிற்பது சர்வதேச சமூகத்தின் கவனத்தை மீண்டும் ஈர்க்கும். இது இலங்கை மீதான சர்வதேச அழுத்தங்களை வலுப்படுத்துவதோடு, தமிழர் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வு அவசியம் என்பதை உலக நாடுகளுக்கு நினைவூட்டும். அத்துடன், தாயகத்தில் உள்ள பொது அமைப்புகள், அரசியற்கட்சிகள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பல தரப்பினரையும் ஒரு பொதுவான கோரிக்கையின் கீழ் அணிதிரட்டுவது தமிழினத்தின் அரசியல் ஒற்றுமையைப் பலப்படுத்தும்.

இந்தக் கரிநாள் போராட்டத்தை ஒரு முழுமையான வெற்றியாக மாற்றவேண்டுமானால், தமிழ்த்தரப்புகள் வெறும் உணர்ச்சிவசப்பட்ட நிலையைத் தாண்டி ஒருங்கிணையவேண்டியது அவசியமாகும். பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுக்கும் இந்தப் போராட்டத்துக்குத் தமிழ் அரசியற்கட்சிகள் தங்களுக்கு இடையிலான கட்சிபேதங்களை மறந்து முழுமையான ஆதரவை வழங்கவேண்டும். புலம்பெயர்தமிழர்கள் அந்தந்த நாடுகளின் தூதரகங்கள் முன்பாக இதே கோரிக்கைகளை முன்வைத்து கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்துவதன் மூலம் இதனை ஒரு சர்வதேசக் கவனவீர்ப்பாக மாற்றமுடியும். மக்கள் சக்தியே மகத்தானது என்பதை நிரூபிக்கும் வகையில், அனைத்துத் தமிழ் அமைப்புகளும் ஒரே குரலில் நீதிகோரி நிற்பதே இந்த அடக்குமுறைக்கு எதிரான சிறந்த பதிலடியாக அமையும். சுதந்திரம் என்பது அனைவருக்கும் சமமானதாக இருக்கும் போதே அது உண்மையான கொண்டாட்டமாக மாறும்; அதுவரை தமிழர் தாயகத்தில் கறுப்புக் கொடிகள் பறந்துகொண்டிருப்பது இன்னமும் எமக்கு நீதி கிடைக்கவில்லை என்பதன் குறியீடே.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




### பொய்யாமொழி

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்**

**பொருள்:** பயன் நிறைந்த மொழிகளில் வல்ல சான்றோரின் பெருமையை, உலகத்தில் அழியாமல் விளங்கும் அவர்களுடைய மறைமொழிகளே காட்டிவிடும்.



## சோளம் பற்றாக்குறையால் திரிபோஷாவுக்குத் தட்டுப்பாடு



**கொழும்பு, ஜன.28**

**கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் இலவச திரிபோஷா, பல மாதங்களாக சில பிராந்திய சுகாதார அதிகாரி அலுவலகங்களுக்கு கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.**

தேவையைப் பூர்த்தி செய்யும் அளவு விநியோகத்தை வழங்கமுடியாததால் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக குடும்ப சுகாதார சேவை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான சோளம் போதுமான அளவு இல்லாததே இதற்குக் காரணம் என்று இலங்கை திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் அமல் அத்தநாயக்க கூறியுள்ளார்.

2024ஆம் ஆண்டில் 4 ஆயிரத்து 800 மெட்ரிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்யக் கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும், அனுமதி வழங்கப்படவில்லை என்றும், அண்மையிலேயே அந்த அனுமதி கிடைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை ஒப்புதல் நிலுவையிலுள்ள நிலையில், 2 ஆயிரம் மெட்ரிக் தொன் சோளம் 3 வாரங்களுக்கும் மேலாக சுங்கச்சாவடிகளில் தேங்கிநிற்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், உற்பத்தி செய்யப்படும் திரிபோஷாவை விநியோகிப்பதிலும் சிக்கல்கள் எழுந்துள்ளன என்றும், போக்குவரத்துக்குப் போதுமான லொறிகள் இல்லாமையே இதற்குக் காரணம் என்றும் இலங்கை திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## மதகுரு மீது தாக்குதல்; 6 பொலிஸார் பணியிடைநீக்கம்

கொழும்பு, ஜன.28

கிறிஸ்தவ மதகுரு ஒருவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கம்பஹா குற்றப்புலனாய்வுப் பணியகத்தின், மோட்டார் சைக்கிள் பிரிவைச் சேர்ந்த ஆறு பொலிஸ் அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். குறித்த சந்தேகநபர்களை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது, எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ச-இ)



## ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகள்

மட்டக்களப்பு, ஜன.28

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் பிரசவத்துக்கு சேர்க்கப்பட்ட தாயொருவர் ஒரே பிரசவத்தில் ஐந்து ஆண் குழந்தைகளை நேற்றுமுன்தினம் பெற்றெடுத்துள்ளார்.

குழந்தைகளும் தாயும் நலமுடன் இருப்பதாக மருத்துவமனை வட்டாரம் தெரிவித்துள்ளது. (ச)

## விபத்தில் சிக்கி பொலிஸ் பலி!

களுத்துறை, ஜன.28

களுத்துறையில் மொரந்துடுவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார். சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ச)



## டெங்குத் தொற்று வேகம்: மக்களுக்கு எச்சரிக்கை

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, இந்த மாதம் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது என்று டெங்குக் கட்டுப்பாட்டுப்பிரிவு எச்சரித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் சுமார் 4 ஆயிரத்து 970 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருந்த நிலையில், இந்த மாதத்தின் இது வரையான காலப் பகுதியில் 6 ஆயிரத்து 521 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

**நாளை**

வியாழக்கிழமை - தை 15

29.01.2026


சுபநேரம் : 08.06 - 09.36

ராகுகாலம் : 02.06 - 03.36


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு கையளிப்பு

மன்னார், ஜன. 28



கடந்த வருடம் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சாந்திபுரம் கிராமத்தில் வீடு ஒன்று தீவிபத்தில் முற்றாகச் சேதமடைந்த நிலையில் மாற்றீடாக புதிய வீடு ஒன்றை மக்கள் நல்வாழ்வு மையம் அமைத்துக் கையளித்துள்ளது. இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. மக்கள் நல்வாழ்வு மையத்தின் ஊடாக பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு சுமார் 20 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட 123 ஆவது வீடாகக் குறித்த வீடு பயனாளியிடம் கையளிக்கப்பட்டது. (ச-56)

# சடலங்களை அடையாளம் காண்க

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ்.போதனா மருத்துவமனையில் 2 விடுதி இலக்கம் 10 இல் 2025.02.09 ஆம் திகதி சேர்க்கப்பட்டு, 2025.02.15 ஆம் திகதி இறந்த 70 வயது மதிக்கத்தக்க, பெயர் தெரியாத ஆணின் சடலம் உரிமை கோரப்படாதுள்ளது.

அத்துடன் மருத்துவமனையின் பிரேதப் பகுதியில் குளிரூட்டியில் 2025.12.16ஆம் திகதியிலிருந்து அடையாளம் காணப்படாத ஆணின் சடலம் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சடலங்களை அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (க)

# குருநகரில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜன. 28

அமரர் செல்வகுமார் ஜெனிஸ்ரனின் ஐந்தாவது ஆண்டு நினைவாகக் குருதிக்கொடை முகாம் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் குருநகர் சென்.றொக் சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் குருதிக்கொடை முகாம் நிகழ்வில் குருதிக் கொடையாளர்களை பங்கேற்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)


**மணமகள் தேவை**

யாழ். இந்து (PA) டோகாவில் வசிக்கும் உத்திரட்டாதி நட்சத்திரம், சூரியன் செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:-
076 961 8110, 077 546 1051

(CS/60575) J-1

**காணி உடனடி விற்பனைக்கு**

யாழ். அரியாலையில் 24 பரப்பு குடியிருப்புக் காணி உடனடி விற்பனைக்கு. 3 அறை வீடு, 2 கிணறுகள், 40 தென்னை மரங்கள் கொண்டது. A-9 கண்டி வீதி 200 மீ தூரத்தில். யாழ். நகர் 15 நிமிடம்.

விபரங்களுக்கு:
074 300 7992
WhatsApp +44 7414 942508

குரு சரணம்



உலகெங்கும் ரெய்கி வகுப்புகள் மற்றும் பல ஆன்மீக பயிற்சி வகுப்புகள் எடுத்து வரும்,
**International Reiki Grand Master**
அம்மா **Dr. Meenakshi A** M.B.B.S., DGO.,
அவர்களின் இலங்கை விஜயம்

வரும் ஜனவரி 24 முதல் பிப்ரவரி 15 வரை
**கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில்**
உங்களை நேரில் சந்தித்து,
தீட்சை தர உள்ளார்கள்



வாழ்க்கை பிரச்சினைகளிலிருந்து நம்மை விடுவித்து வாழ்வை வளமாக்கும் ரெய்கி தீட்சை பெற்று வாழ்வில் மேன்மை பெறுங்கள்!

ரெய்கி 1 & 2 மற்றும் தெய்வீக கலைகள் பயிற்சி பற்றிய விவரங்களுக்கு

**0772 382 566**

என்ற எண்ணிற்கு Whatsapp-ல் தொடர்பு கொள்ளுங்கள்.

# மகத்தான சேவையாளனுக்கு மணிவிழா வாழ்த்துக்கள்




## உயர்திரு ஆறுமுகம் சத்தியமூர்த்தி

நிர்வாக உத்தியோகத்தர் மு.சே.உத் (அதிசிறப்பு)
மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்.
B.A, HNDA மற்றும் தாபன நிதி சார்ந்த தமிழ்
உத்தியோகத்தர்களுக்குரிய மிகச்சிறந்த வளவாளர்.

உழுவலுடன் மாவட்டச் செயலகம் வந்து
உவப்போடு பலகிளையும் ஒன்றி நின்று
பழுதிலா பணியாலே நிர்வாக உத்தியோகத்தர்
பாங்குறவே மேன்மையதை கண்ட தீரன்
விழுதெனவே காரைநகர் நெடுந்தீவு யாழ்ப்பாணம்
வெற்றியுடன் நல்லூர் மீண்டும் செயலகமென
தொழுதவிறை சேவையென நாற்பது ஆண்டு
துலங்குகின்ற பெருமகனே வாழி! வாழி!

எண்ணரிய நுட்பங்கள் பலவும் பெற்று
ஏற்றமுடன் தாபனநிதி முறைமை கற்று
கண்ணினிய சேவைக்குள் அவற்றைப் பாய்ச்சி
கனதியுற வழிகாட்டல் நூல்கள் தந்து
பண்ணுறவே பதவிக்குப் பெருமை சேர்த்து
பலநூறு உத்தியோகத்தர்களின் உயர்வு காட்டி
விண்ணனென திகழுகின்ற பெயர் வல்லானே
வீசு புகழ் பெருகிடவே வாழி ! வாழி !





வாழ்த்துவோர்:


**அன்புக்கினிய உறவினர்களும், உத்தியோகத்தர்களும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 04 . 05 . 1953


உதிர்வு 26 . 01 . 2018



## அமரர் வி.எம்.கணபதிப்பிள்ளை புலேந்திரன்

(ஸ்தாபகர் - New V.M.K. ஜுவல்லர்ஸ், V.M.K. மில், V.M.K.JCB)

அன்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே
எம் வாழ்வுக்கு ஒளியூட்டிய வட்டநிலவே
ஏணியாக நின்று எம்மை ஏற்றி விட்டவரே…
தோணியாக நின்று துறைமுகம் காட்டியவரே…..
வாழ்வுக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டியவரே
இன்னும் சில காலம் எங்களோடு
வாழ மறந்ததேன்? எம் குடும்பத்தின்
ஒளிவிளக்காய் வாழ்ந்த எங்கள் அன்புத்தெய்வம்
அனைந்து ஆண்டுகள் எட்டு உருண்டோட
எங்கள் மனம் உங்களை தேடி நிற்கிறது.



ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

V.M.K.புலேந்திரன் கோகுலராஜன்
உரிமையாளர் - New V.M.K.ஜுவல்லேர்ஸ்,
V..M.K. மில் , V.M.K. JCB.

கண்டி வீதி, சாவகச்சேரி.

(CR/46931) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானச்சுடர் வெளியீடு

யாழ்.,ஜன.28

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக ஞானச்சுடர் சஞ்சிகையின் 337 ஆவது தைமாத இதழ் வெளியீட்டு நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் சைவப் புலவர் க.தேவமனோகரன் மலரின் வெளியீட்டுரையையும், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன் மலரின் மதிப்பீட்டுரையையும் ஆற்றுவர். அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்படவுள்ளன. (ச-66)

## மரண அறிவித்தல்



### திருமதி இன்பமலர் ஐசக் அருளையா

நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இன்பமலர் ஐசக் அருளையா அவர்கள் நேற்று (27.01.2026) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐசக் அருளையாவின் பாசமிகு துணைவியும், காலஞ்சென்றவர்களான தேவரத்தினம், சபாரத்தினம் மற்றும் ரஞ்சிதமலர், ஜேசுரட்ணம் (Engineer) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஐசக் இன்பராஜா, அருள்மலர் மற்றும் தேவமலர், மேரி நேசமலர் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), பியூலா ஜெயமலர் (ஆசிரியர்- நவாலி Y.M.C.A) ஐசக் அதிசயராஜா (விரிவுரையாளர் - PDCT மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவமலர் இன்பராஜா, ஜோன்பப்ரிஸ்ட் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), கமலினி (ஆசிரியர் - ஆனைக்கோட்டை A.M.T.M. School) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான வண.சேவக். ஐசக் இயேசுசகாயம் (சின்னண்ணன்- ஆச்சிரமம் மருதனார்மடம்), ஐ.பொன்னுத்துரை, ஐ.ஞானப்பிரகாசம், ஐ.தம்பிராஜா மற்றும் வண.ஐசக் செல்வரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஸ்ரீபன் (Manger-Suganth International Private Ltd.), கௌதமன் (Engineer-கனடா), செரூபா (MA- யாழ்ப்பாணக் கல்லூரி), மெரிலா (ஆசிரியர் - மானிப்பாய் மகளீர் கல்லூரி), Dr. மேசி சில்வியா (தேசிய வைத்தியசாலை- கொழும்பு), கில்ரன் (Software Engineer- SGIC), ஆராதனா (மாணவி- உடுவில் மகளீர் கல்லூரி), கஜனி (ஆசிரியர் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி), நிஷாந் (ஆசிரியர்- கொக்குவில் இந்துக் கல்லூரி), உஷாந்தி (Project Coordinator - கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அஸ்வின், எமிரா, ஹர்ணிகா, யாசவி ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.01.2026) புதன் கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, நவாலி C.A.C.M கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சகாயர் இல்லம்
நவாலி தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
ஐசக் அதிசயராஜா (மகன்)
T.P - 0776621819

(CS 60572) A

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
12 . 07 . 1934



ஆண்டவன் அடியில்
31 . 12 . 2025

மார்கழி 31ம் நாள் 2025 அன்று சிவபதமடைந்த
எமது வாழ்வின் வழிகாட்டியும், எமது குலவிளக்குமாகிய

### அமரர் இரத்தினம் கந்தையா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.01.2026) புதன்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும், அதன் பின்னர் நாளை மறுதினம் (30.01.2026) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. எமது இழப்பை அறிந்து இதுவரை சரீர உதவிகளையும், தந்து பக்கதுணையாய் இருந்தவர்களுக்கும் நேரில் வருகை தந்தவர்களுக்கும், முகநூல் மற்றும் தொலைபேசி ஊடாக எமது துயரை பகிர்ந்தோருக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் நன்றிகள் பல உரித்தாகட்டும். எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கு தனித்தனியே நன்றிகளோ, அழைப்போ தெரிவிக்காமல் இருந்தால் இவ் அறிவிதலை அனைவரும் ஏற்று 31ஆம் நாள் கிரியையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சாயுடை வீதி,
மாவிட்டபுரம்.

(CS/60574) J-1

குடும்பத்தினர்
077 606 1641, 076 222 7623

## மரண அறிவித்தல்



### காசிப்பிள்ளை கணேஷமூர்த்தி

நுணாவில் சந்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை கணேஷமூர்த்தி அவர்கள் கடந்த (25.01.2026) ஞாயிற்றுக்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் செல்வப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - செல்வராணி தம்பதியரின் மருமகனும், சுசிலாதேவி அவர்களின் அன்புக் கணவரும், கௌத்திரிகா (ராசாத்தி - கொழும்பு), கபிலன் (லண்டன்), தீபன் (லண்டன்), தீபனா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்னேஷ்வரன் (கொழும்பு), நிஷாமினி (லண்டன்), மீரா (லண்டன்), மனோஜ்குமார் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மிதுக்ஷா (கொழும்பு மருத்துவபீடம் 4th year), சாருஜித் (அமெரிக்கா), கிஷாந்த் (லண்டன்), சபிஷன் (லண்டன்), சவீன் (அமெரிக்கா), நிஷானா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், நேசமணி, செல்வநாயகி, சுலோசனாதேவி ஆகியோரின் செல்லத் தம்பியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நுணாவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் குச்சபிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்வு
15.04.1954

உதிர்வு
25.01.2026

தகவல் :
கௌத்திரிகா (மகள் - கொழும்பு)
கபிலன் (மகன் - லண்டன்)
077 808 1436

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முதலில் உங்களை நீங்களே நேசிக்க கற்றுக்கொள்ளுங்கள் பிறகு உங்களை மற்றவர்களும் நேசிக்க ஆரம்பிப்பார்கள்


– மால்ட்ஸ்

புதன் பொய்கை

28.01.2026
புதன்கிழமை

# தூங்கும் அறிவைத் தட்டியெழுப்பும் தூதுவர்கள்: சிறுவர் இதழியலின் சவால்களும் தேவைகளும்!


● பவித் அருள்வசந்



"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" இது காலம் தந்த வாக்கு. இன்று எழுத்துலகில் ஜொலிக்கும் பெரும்பான்மையான படைப்பாளிகளுக்கும், ஆழ்ந்த வாசிப்புப் பழக்கம் கொண்ட வாசகர்களுக்கும் அந்த ஞானத்தின் முதல் வாசல், அவர்கள் சிறுவயதில் கையில் ஏந்திய 'சிறுவர் பத்திரிகைகளாகத்' தான் இருக்கும். பள்ளிக்கூடப் பாடப்புத்தகங்கள் அறிவின் ஒரு பகுதியை மட்டுமே போதிக்கும் நிலையில், "பாடசாலைகள் செய்யத் தவறிய தொண்டினைச் செய்வதே சிறுவர் பத்திரிகைகள்" என்கிறார் லேனா தமிழ்வாணன். ஒரு குழந்தையின் ஐந்தாம் வயதில் பத்திரிகை வாசிப்புப் பழக்கம் ஆரம்பமாகுமானால், அப்பிள்ளையின் வாழ்க்கை வளம் பெறும் எனப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனும் இதனை வழிமொழிகின்றார்.

**பாலியர் நேசன் முதல் இன்றைய ஈழத்து இதழ்கள் வரை**

ஈழத்துச் சிறுவர் இதழியல் என்பது ஒன்றரை நூற்றாண்டிற்கும் மேலான நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டது. 1859இல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'பாலியர் நேசன்' இதழே ஈழத்துச் சிறுவர் இதழியலுக்கு அத்திவாரமிட்டது. அதனைத் தொடர்ந்து அருச்சுனா, துளிர், சாளரம், அறிவுக்களஞ்சியம், விஜய், ஜீனியஸ், உதயசூரியன் போன்ற இதழ்கள் பல தலைமுறைச் சிறுவர்களின் சிந்தனைத் திறனைச் செதுக்கின. சிறுவர்களுக்காக எழுதுவது என்பது கத்தியின் மேல் நடப்பது போன்றது. ஈழநாதம் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் இராதையன் கூறுவது போல, "சிறுவர்களுக்காக எழுதுபவர்கள் ஒவ்வொரு சொல்லிலும் கவனமாக இருக்கவேண்டும்; ஏனெனில் ஒரு சொல் மாறினாலும் குழந்தைகள் உள்வாங்கும் கோணம் சிதைந்துவிடும்." என்பது முக்கியமான விடயம்.



**சமகாலச் சவால்கள்: திரைகளுக்கு அடிமையாகும் தலைமுறை**

இன்றைய சிறுவர்கள் மத்தியில் வாசிப்பு என்பது பலவீனமான ஒன்றாக மாறிவருவது கவலைக்குரியது. ஒரு காலத்தில் நூலகங்களும் சனசமூக நிலையங்களும் சிறுவர்களின் பொழுதுபோக்குத் தளங்களாக இருந்தன. ஆனால், இன்று சமூக ஊடகங்களின் எல்லையற்ற ஆதிக்கம் சிறுவர்களின் கைகளிலிருந்து புத்தகங்களைப் பறித்துத் திரைகளைக் கொடுத்துள்ளது. பொருளாதார நெருக்கடியால் பெற்றோரால் புத்தகங்களை வாங்கிக் கொடுக்க முடியாமை, வீடுகளில் வாசிப்புச் சூழல் இன்மை மற்றும் பாடசாலைகளில் பத்திரிகை வாசிப்பு ஊக்கப்படுத்தப்படாமை போன்றவை இந்தச்சரிவுக்கு முக்கியமான காரணங்களாகும்.

மேலும், இந்திய இதழ்களான அம்புலிமாமா, சுட்டி விகடன் போன்றவற்றின் வருகை ஈழத்துச் சுதேசியப் படைப்புகள் மீதான கவனத்தைக் குறைத்துள்ளதும் ஒரு கசப்பான உண்மையே. அதுமட்டுமன்றி, பாட்டி சொல்லும் கதைகளைக் கேட்டு வளர்ந்த அந்த 'வாய்மொழி மரபு' இன்று குடும்பங்களில் மறைந்து வருவதால், குழந்தைகளிடம் இயல்பாகவே ஏற்படவேண்டிய கற்பனைத் திறனும் வாசிப்பு ஆர்வமும் மழுங்கடிக்கப்படுகின்றன.

**ஏன் வாசிக்கவேண்டும்?**

இளமையிலேயே வாசிக்கத் தொடங்கும் சிறார்கள், பதின்ம வயதிற்கு மேல் பேரிலக்கியங்களை எளிதாகப் புரிந்துகொள்ளும் ஆற்றலைப் பெறுகின்றனர். மொழி அறிவு, ஆளுமை வளர்ச்சி, உலக நடப்புகள் மற்றும் விளையாட்டுத் தகவல்கள் எனப் பன்முக அறிவைப் பெறுவதற்கு வாசிப்பைத் தவிரச் சிறந்த வழி வேறில்லை. எதிர்கால அறிஞர்களையும், விஞ்ஞானிகளையும், சிந்தனையாளர்களையும் உருவாக்குவதில் சிறுவர் இதழ்களின் பங்கு ஈடு இணையற்றது.

**மாற்றத்துக்கான வழிகள்**

எதிர்காலச் சமுதாயத்தைப் புரட்சிகரமானதாக மாற்றவேண்டுமானால், சிறுவர்களை மீண்டும் பத்திரிகைகளை நோக்கித் திருப்ப வேண்டும். சமூக ஊடகப் பயன்பாட்டைக் குறைத்து, வீடுகளிலும் பாடசாலைகளிலும் 'வாசிப்பு நேரத்தை' கட்டாயமாக்கவேண்டும்.


சிறுவர் பத்திரிகைகளை நவீனத் தொழில்நுட்பத்துடன், வண்ணமயமான படங்களுடன், சுருக்கமான மற்றும் சுவாரசியமான கட்டுரைகளுடன் வடிவமைக்க வேண்டும்.

கிராமப்புற நூலகங்கள் மற்றும் சன சமூக நிலையங்களில் சிறுவர் இதழ்கள் தடையின்றிக் கிடைப்பதை உறுதி செய்யவேண்டும்.

சிறுவர்களை வெறும் வாசகர்களாக மட்டும் வைக்காமல், அவர்களைப் படைப்பாளிகளாகவும் மாற்றி அவர்களின் படைப்புகளுக்கு இதழ்களில் முன்னுரிமை அளிக்கவேண்டும்.

இன்றைய சிறுவர்களை நாளைய தலைவர்களாக்கும் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது. நமது வாழ்வியலையும் கலாசாரத்தையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதற்கு வாசிப்பைத் தவிர வேறு சிறந்த மார்க்கம் எதுவுமில்லை. வாசிப்பின் ஊடாகப் பூரணமடைந்த ஒரு அறிவுச் சமூகத்தை உருவாக்குவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தைகளுக்கு வயிற்றுவலியா? பெற்றோரே அவதானம்!

Dr. பா. சயந்தன்
(குழந்தைகள், சிறுவர் சத்திர சிகிச்சை நிபுணர், யாழ்.போதனா மருத்துவமனை)

குழந்தைகளில் ஏற்படும் வயிற்றுவலி பெரும்பாலும் சாதாரணமானதாகக் கருதப்படுகிறது. ஆனால் சில சந்தர்ப்பங்களில், அதுவே அவசர சிகிச்சை தேவைப்படும் தீவிர நோய்களின் ஆரம்ப அறிகுறியாகவும் இருக்கக்கூடும்.

பெரியவர்கள் போல குழந்தைகள் தங்களின் வலியைத் தெளிவாக வெளிப்படுத்த முடியாமல் இருக்கலாம். "வயிறு வலிக்கிறது", " குழந்தை தொடர்ந்து அழுதுகொண்டிருக்கிறது", "உணவு உண்ண மறுக்கிறது" போன்ற எளிய புகார்களை நாம் அலட்சியப்படுத்தலாம். இந்த அலட்சியம், சில நேரங்களில் குழந்தையின் உயிரையே ஆபத்தில் ஆழ்த்தக்கூடும்.

**உதாரணம்1:**

அடைப்பு ஏற்பட்ட குடலிறக்கம் (Obstructed Inguinal Hernia)

குழந்தைகளில் பொதுவாகக் காணப்படும் குடல் இறக்கம் ஆரம்ப நிலையில் வலியின்றிய சிறிய வீக்கமாக மட்டுமே இருக்கலாம். "சிறிய வீக்கம்" என நாம் சிகிச்சையைத் தள்ளிப்போடுவது ஆபத்தானதாகும்.

திடீரென:

- வீக்கம் கடினமாதல்
- கடும் வயிற்றுவலி
- வாந்தி
- குழந்தை இடைவிடாது அழுதல்

போன்ற அறிகுறிகள் தோன்றினால், அது அடைப்பு ஏற்பட்ட குடலிறக்கமாக இருக்கக்கூடும்.

இந்த நிலையில் குடலுக்குச் செல்லும் இரத்த ஓட்டம் தடைப்பட்டு, குடல் இறக்கத் தொடங்கும். சிகிச்சை தாமதமானால், இறந்த குடலை அகற்ற வேண்டிய நிலை, தீவிர நோய்த்தொற்று, சில சந்தர்ப்பங்களில் உயிரிழப்பும் ஏற்படலாம்.

ஆரம்பத்திலேயே சத்திரசிகிச்சை மேற்கொண்டால் முழுமையாகக் குணப்படுத்த இயலும்.

**உதாரணம் 2:**

குடல் உட்செருகும் நோய் (Intussusception)

சிறு குழந்தைகளில் திடீரென ஏற்படும்:

- இடைவிடாத வயிற்றுவலி
- தொடர்ச்சியான அழுகை
- வாந்தி
- சில நேரங்களில் இரத்தம் கலந்த மலம்

இவை அனைத்தும் Intussusception எனப்படும் அவசர நோய் நிலையின் அறிகுறிகளாக இருக்கலாம். இந்த நோய் பெரும்பாலும் பச்சிளம் மற்றும் சிறு குழந்தைகளில் காணப்படுகிறது. அரிதாகப் பெரிய குழந்தைகளிலும் ஏற்படலாம்.

பலமுறை இது 'சாதாரண வயிற்றுவலி' அல்லது 'வயிற்றுப்போக்கு' எனத் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. ஆனால் இதில் ஒரு குடல் பகுதி, மற்றொரு குடல் பகுதிக்குள் மடங்கிச் சென்று சிக்கிக்கொள்ளும். சரியான நேரத்தில் சிகிச்சை அளிக்கப்படாவிட்டால், குடல் அழுகி, பெரிய சத்திரசிகிச்சை செய்யவேண்டிய நிலை ஏற்படலாம்.

ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டால், சத்திரசிகிச்சை இன்றியே குணப்படுத்த இயலும்.

**தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள்**

- குழந்தைகள் தங்களின் வலியைத் தெளிவாக வெளிப்படுத்த இயலாமை
- "குழந்தை அழுவது இயல்பானது" என்ற தவறான எண்ணம்
- கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகளும் போக்குவரத்தும் தாமதமாதல்
- வலி நிவாரண மருந்துகளை வீட்டிலேயே பயன்படுத்தும் பழக்கம்

**பெற்றோருக்கான முக்கியமான அறிவுறுத்தல்கள்**

- குழந்தையின் வயிற்றுவலியை இயல்பானதாகக் கருத வேண்டாம்
- தொடர்ந்து அழுதல், வாந்தி, வயிற்று வீக்கம், உணவு மறுப்பு இவை தீவிர நோய்களின் எச்சரிக்கை அறிகுறிகளாக இருக்கலாம்
- சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகவேண்டும்
- சிகிச்சை தாமதம் குழந்தையின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம்

குழந்தையின் வலி புரியாத மொழியாகும். அதைக் கவனித்து, சரியான நேரத்தில் நடவடிக்கை எடுப்பது பெற்றோரின் மிக முக்கியமான பொறுப்பாகும். "பின்னர் பார்க்கலாம்" என்ற ஒரு முடிவு, சில நேரங்களில் வாழ்க்கை முழுவதையும் மாற்றிவிடக்கூடும்.

# நாவற்குழி மண்ணின் நயமிகு சொல்லாடல்கள்

கில்டா தேவராசா

வாழ்க்கை என்பது ஒரு மகா சமுத்திரம். அந்தச் சமுத்திரத்தில் நீந்திச் செழித்த நம் முன்னோர்கள், தாங்கள் பெற்ற அனுபவங்களை வெறும் வார்த்தைகளாக மட்டும் விட்டுச் செல்லவில்லை; அவற்றை அறிவார்ந்த 'மரபுத்தொடர்களாக' நம்மிடம் கையளித்திருக்கிறார்கள். தென்மராட்சியின் நுழைவாயிலான நாவற்குழி மண்ணில், கிராமிய மணம் மாறாத அந்தச் சொல்லாடல்கள் இன்றும் மக்களின் நாவுகளில் எப்படித் தவழ்கின்றன என்பதை ஆராய்ந்தபோது பல சுவாரசியமான உண்மைகள் புலப்பட்டன.

**தெரியாமல் தொடரும் மரபுகள்**

ஆய்வின் போது ம. கமலாதேவி என்ற பெண் கூறிய ஒரு கருத்து மிக முக்கியமானது. "இப்ப நாங்கள் இந்த மரபுத் தொடர்களைப் பின்பற்றுகிறோமா என்று கேட்டால் 'இல்லை' என்றுதான் சொல்லுவோம். ஆனால், எங்களுக்கே தெரியாமல் நிறையத் தொடர்களை இன்றும் பேசிக் கொண்டுதான் இருக்கிறோம்" என்றார் அவர். ஆம், மரபுத்தொடர் என்று தெரியாமலேயே அது நம் இரத்தத்தோடு கலந்த மொழியாகிவிட்டது.

**வாழ்க்கைப் பாடத்தைச் சொல்லும் தொடர்கள்**

கிராமத்து மரபுத்தொடர்கள் என்பவை வெறும் அலங்காரச் சொற்கள் அல்ல; அவை ஒவ்வொன்றும் ஒரு வாழ்க்கைப்பாடம். ஆய்வில் தென்பட்ட சில முக்கியமான மரபுத்தொடர்களைப் பார்ப்போம்:

இரண்டு தோணியில் கால் வைத்தல்: ஒரே நேரத்தில் முரண்பாடான இரண்டு விடயங்களில் ஈடுபட முயல்வதை இது குறிக்கிறது. கடலில் இரு தோணிகளில் கால் வைத்தால் அவை விலகிச் செல்லும் போது கடலில் விழ நேரிடும் என்பதைப் போன்றே, வாழ்க்கையிலும் தெளிவான முடிவின்றிச் செயற்பட்டால் தோல்வி நிச்சயம் என்ற புத்திமதியை இது நாவற்குழி மக்களிடையே ஆழமாகப் பதிய வைத்திருக்கிறது.

உதவாக்கரை: பயனற்ற மனிதர்களைச் சாடுவதற்கு இன்றும் நம் ஊர்களில் பயன்படுத்தப்படும் சொல் இது. கரைக்கு உதவாத ஒன்றைப் போல, சமூகத்திற்குப் பலன் தராதவர்களைக் குறிக்க இது கையாளப்படுகிறது.

இலை மறை காய்: ஒரு மரத்தில் காய்கள் இலைகளுக்குப் பின்னால் மறைந்திருப்பதைப் போல, பிரதிபலன் பாராமல் மறைமுகமாகச் சேவை செய்யும் நல்லுள்ளங்களை நாவற்குழி மக்கள் இத்தொடரால் போற்றுகிறார்கள்.

**உறவுகளும் உணர்வுகளும்**

இடம் கொடுத்தல்: "குட்டி நாய்க்கும் குழந்தைப் பிள்ளைக்கும் இடம் கொடுக்கக் கூடாது" என்ற பழமொழியின் சாரமாக உருவானதே இந்தத் தொடர். அளவுக்கு மீறிய செல்லமோ அல்லது அத்துமீறலோ ஒருவருக்குச் சங்கடத்தைத் தரும் என்பதைச் சுருக்கமாகச் சொல்கிறது 'இடம் கொடுத்தல்'.

கை கொடுத்தல்: மனிதநேயத்தின் உச்சமான உதவி மனப்பான்மையை 'கை கொடுத்தல்' என்ற இரண்டு சொற்கள் அழகாகக் கடத்தி விடுகின்றன. துன்பத்தில் இருப்பவனுக்கு நீட்டப்படும் நேசக் கரமே இது.

அலைக்கழித்தல்: வேலைக்காகவோ அல்லது பிற தேவைகளுக்காகவோ ஒருவரைத் தேவையின்றி அலைய வைப்பதன் வலியை இந்தத் தொடர் பிரதிபலிக்கிறது.

நாவற்குழி போன்ற கிராமப்புறங்களில் மட்டுமல்லாது, நகர்ப்புறங்களிலும் இன்னமும் நாட்டார் மரபுகள் ஏதோ ஒரு வகையில் உயிர்வாழவே செய்கின்றன. நம் முன்னோர்கள் நம்மை அறிவால் உயர்த்துவதற்காக வாய்மொழி ரீதியாக விட்டுச் சென்ற இந்த மரபுத்தொடர்கள், நம் மொழியின் வேர்கள். அவற்றை ஆவணப்படுத்துவதும், அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பதும் நமது பண்பாட்டு அடையாளத்தைக் காக்கும் முயற்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாற்றுக்குறிகாட்டியாகும் கோட்டை



எஸ்.அனோஜா



யாழ்ப்பாணம் என்றாலே, அதன் மண் தரும் சுவை மட்டுமல்ல; வரலாற்றின் ஆழமான தடங்களும் தான் நினைவுக்கு வரும். இந்தப் பழம்பெரும் நகரத்தின் இதயத்தில், காலத்தின் சோதனைகளைக் கடந்து கம்பீரமாக நிற்பது யாழ்ப்பாணக் கோட்டை.


யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் தென்பகுதியில் கடல்நீரேரியுடன் அமைந்த இந்தக்கோட்டை இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய கோட்டையாகக் கருதப்படுகிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் பல கலாசாரங்களின் சங்கமமாகவும் உருவானதே யாழ்.கோட்டை. இது முதன்முதலில் 1560ஆம் ஆண்டு போர்த்துக்கேயர்களால் கட்டப்பட்டது. அந்தநேரத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அவர்கள் இந்தக் கோட்டையை வலுவான படைத்தளமாக உருவாக்கினர். கோட்டையின் முதல் வடிவமைப்பு சிறியது; ஆனால் பாதுகாப்பு நோக்கில் மிக வலுவாகக் கட்டப்பட்டது.

1658ஆம் ஆண்டு ஒல்லாந்தர்கள், போர்த்துகேயர்களினைத் தோற்கடித்து கோட்டையை கைப்பற்றினர். ஒல்லாந்தர்கள் கோட்டையை முழுமையாக மாற்றியமைத்து, இன்று நாம் காணும் ஐவகை நட்சத்திர வடிவத்தை ஏற்படுத்தினர். அதன் கோணங்கள் மற்றும் கொத்தளங்கள், ஒவ்வொரு அங்குலமும் பாதுகாப்புத் தந்திரோபாயங்களுக்காக வடிவமைக்கப்பட்டதை உறுதி செய்கிறது.

1795ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்துக் கோட்டை ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டது. 1948 ஆம் ஆண்டு வரை ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிலேயே இந்தக் கோட்டை இருந்தது. அதற்குப் பிறகு இலங்கை இராணுவம் இதைப் பயன்படுத்தியது. கோட்டையின் கட்டுப்பாடு பெரும்பாலும் இலங்கை அரசாங்கப் படைகளின் (Sri Lankan Armed Forces) கைகளில் இருந்தது. இது யாழ்ப்பாண நகரத்தில் அரசுப் படைகளின் மைய நிர்வாகத் தளமாகவும், இராணுவ முகாமின் தலைமையகமாகவும் விளங்கியது.

1980களில் உள்நாட்டுப் போரின் போது இந்தக் கோட்டை பெரும் சேதத்திற்கு உள்ளானது. 1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டையை விடுதலைப்புலிகள் கைப்பற்றிய நிகழ்வு, போரின் ஒரு முக்கியமான திருப்புமுனையாக அமைந்தது.

புலிகள் கோட்டையை முற்றுகையிட்டு தொடர்ச்சியான குண்டு வீச்சுகளையும் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.பல மாதங்கள் நீடித்த இந்த முற்றுகை மிகவும் கடுமையான ஒன்றாக இருந்தது 1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி, விடுதலைப்புலிகள் கோட்டையைக் முழுமையாகத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இது யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தின் இராணுவ இருப்புக்கு ஒரு பெரும் பின்னடைவாக இருந்ததுடன், புலிகளின் பலத்தையும் அவர்களின் இராணுவத் திறனையும் உலகுக்கு வெளிப்படுத்தியது.



இவ்வாறான பல போர்களைப் பார்த்த இந்தக்கோட்டையானது இன்று பல சுற்றுலா பயணிகளைக் கவரும் சுற்றுலாத் தலமாக வளர்ச்சி பெற்றுள்ளது. இங்கிருந்து பார்க்கக் கிடைக்கும் கடலின் அழகும், சூரிய அஸ்தமனமும் கண்கொள்ளாக் காட்சிகளாகும். யாழ்ப்பாணத்துக்கு வரும் ஒவ்வொருவரும், கோட்டைக்கு விஜயம் செய்து, அதன் பிரமாண்டத்தையும், அது பேசும் வரலாற்றையும் அனுபவிக்க வேண்டும்.

நெதர்லாந்து அரசின் நிதியுதவியோடு, தொல்லியல் திணைக்களத்தினால் கோட்டையின் பல பகுதிகள் சீரமைக்கப்பட்டு, பொதுமக்கள் பார்வைக்குத் திறக்கப்பட்டுள்ளன. நடைபாதைகள், பாதுகாப்பு மதில்கள், நுழைவாயில்கள் போன்றவை புதுப்பிக்கப்பட்டு, சுற்றுலாப் பயணிகள் எளிதாகச் சுற்றிப் பார்க்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை தருவதால், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்காற்றுகின்றது.

மத்திய கலாசார நிதியம் வெளியிட்ட 2025ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரையிலான புள்ளி விவரங்களின் படி, யாழ்ப்பாணக் கோட்டை ஒரு வளர்ந்து வரும் முக்கியமான சுற்றுலாத் தலமாகத் திகழ்கிறது. இந்தக்காலப்பகுதியில் யாழ்ப்பாணக் கோட்டையை மொத்தமாக 115,121 சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டுள்ளனர். இதில் 7,030 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும், 108,091 உள்ளூர் சுற்றுலாப் பயணிகளும் அடங்குவர். யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ரூ. 15.8 மில்லியனுக்கு மேற்பட்ட சுற்றுலா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. இதன் பெரும்பகுதி வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் நுழைவுக் கட்டணங்களிலிருந்து கிடைத்ததாக புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. இது, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், வருமானத்தில் அவர்கள் குறிப்பிடத்தக்க பங்காற்றுகின்றனர் என்பதைக் காட்டுகிறது.

யாழ்ப்பாணக் கோட்டையானது முதன் முதலில் 2010ஆம் ஆண்டு தொல்லியல் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டது. இந்த அகழ்வாய்வில் ஏராளமான தொல்பொருள் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டன. குறிப்பாக பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய கறுப்பு சிவப்பு நிற மட்பாண்டங்கள், உரோம மண்பாண்டங்கள் போன்றன கண்டெடுக்கப்பட்டன. இது கோட்டைப் பகுதியில் ஆரம்பகாலப் பகுதிகளில் பெருங்கற்காலப் பண்பாடு நிலவி உள்ளமையை பறைசாற்றுகின்றது.

அதை அடுத்து 2017ஆம் ஆண்டு மீண்டும் ஓர் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. மத்திய கலாசார நிதிய யாழ்ப்பாண செயற்றிட்டத்தின் அனுசரணையுடன் Durham பல்கலைக்கழகமும் யாழ்ப்பாண பல்கலைக்கழக தொல்லியல் பிரிவும் இணைந்து நவீன தொழில்நுட்பக்கருவிகளைப் பயன்படுத்தி விஞ்ஞானபூர்வமாக அகழ்வினை மேற்கொண்டன. இந்த அகழ்வாய்வில் 9 கலாசார மண்படைகள் அடையாளப்படுத்தப்பட்டன. 9ஆவது மண்படையில் இற்றைக்கு 1500 வருடங்களுக்கு முற்பட்ட மட்பாண்டத் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

காலனித்துவ ஆட்சிகளின் தடங்கள், உள்நாட்டுப் போரின் காயங்கள், அதற்குப் பின்னரான மீளுருவாக்க முயற்சிகள் ஆகிய அனைத்தையும் தன்னுள் சுமந்து நிற்கும் யாழ்.கோட்டை, இன்று சுற்றுலா மற்றும் தொல்லியல் முக்கியத்துவம் கொண்ட ஒரு தேசியப் பாரம்பரியத் தளமாக மாறியுள்ளது. தொல்லியல் ஆய்வுகள் வெளிப்படுத்தும் அதன் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான வரலாறு, யாழ்ப்பாணத்தின் நாகரிகப் பெருமையை மேலும் உறுதிப்படுத்துகிறது. வரலாற்றைப் பாதுகாப்பதும், அதை எதிர்காலத் தலைமுறைகளுக்கு பொறுப்புடன் கொண்டுசேர்ப்பதும் இன்றைய சமூகத்தின் கடமையாகும். வரலாறு பேசும் இந்தக் கோட்டை, யாழ்ப்பாணத்தின் அடையாளமாக என்றும் உயர்ந்து நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய இசையாக வேர்கொண்ட கலைஞர்!



## கிராமிய இசைக்கலைஞர் லிங்கராசா பாக்கியராசாவுடனான ஒரு சந்திப்பு



திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் மண்ணில், பாரம்பரியக் கலைகளின் வேர் அறுந்துவிடாமல் பாதுகாத்து வரும் மூத்த கலைஞர் லிங்கராசா பாக்கியராசாவின் வாழ்வியலையும் கலையார்வத்தையும் வெளிப்படுத்தும் நேர்காணல் இது

நேர்கண்டவர்: சௌந்தரராஜன் துர்ஷாயினி

**நான் வருமானத்திற்காகச் செய்யவில்லை, இறைவனுக்குச் செய்யும் தொண்டாகவே பார்க்கிறேன்.**

**கே: கிராமிய இசை மற்றும் பக்திப் பாடல்கள் மீதான உங்கள் ஆர்வம் எப்போது, எப்படித் தொடங்கியது?**

ப இது எனது இரத்தத்திலேயே ஊறிய கலை. எனது தந்தை லிங்கராசா ஒரு பாரம்பரிய கிராமிய இசைப் பாடகர். சிறுவயதில் அவர் உடுக்கு அடித்துப் பாடும்போது, பின்பாட்டுப் பாடிக்கொண்டே அவர் பின்னால் செல்வேன். அந்தச் செவிவழி ஞானமும் ஈடுபாடுமே என்னை இந்தக் கலைக்குள் இழுத்துவிட்டன. தந்தையின் மறைவுக்குப் பிறகு, கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தக் கலையை ஒரு தவமாகவே செய்து வருகிறேன். 2001ஆம் ஆண்டு கள்ளிமேட்டு முத்து மாரியம்மன் கோவில் கும்ப விழாவில் முதன் முதலாகப் பாடிய அந்தத் தருணம் இன்றும் பசுமையாக இருக்கிறது.

**கே: நீங்கள் பாடும் பாடல்கள் மற்றும் அதற்குப் பயன்படுத்தும் இசைக் கருவிகள் குறித்துக் கூறமுடியுமா?**

ப கிராமிய இசையில் பல கருவிகள் இருந்தாலும், நான் இன்றும் பயன்படுத்துவது 'உடுக்கை' மட்டும்தான். கும்மி, காணியம் சிந்து, அகவல், அம்மன் தாலாட்டு, குளிர்ச்சிப் பாடல், காவடிச் சிந்து எனப் பக்தி மணம் கமழும் அத்தனை பாடல்களையும் பாடி வருகிறேன். தந்தை பாதுகாத்து வைத்திருந்த ஏட்டுச்சுவடிகள் மற்றும் புத்தகங்கள் எனது பிரதான ஆதாரங்கள். பல பாடல்கள் எனக்கு மனப்பாடம். சில சமயங்களில் தெய்வீகக் கலையுணர்வால் தானாகவே புதிய வரிகள் பிறப்பதும் உண்டு. தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரர் கோயில் முதல் முத்து மாரியம்மன் கோயில் வரை பல இடங்களிலும் எனது குரல் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

**கே: உங்கள் குடும்பத்தில் இந்தக்கலையின் அடுத்தகட்ட வாரிசுகள் யார்?**

ப எனது மகன் நிஜந்தன் மீது எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. தெய்வீகக் கலையை மனப்பூர்வமாக உணர்ந்தால் மட்டுமே அதில் மிளிர முடியும். நான் பாடும்போது அவன் உடுக்கு வாசிப்பான். அவனுக்குப் பாடல்களை இயற்றும் ஆற்றலும் இறைசிந்தனையும் இருப்பதால், எனக்குப் பின் அவன் இந்தக்கலையைச் சுமந்து செல்வான். அத்துடன் எனது மருமகனும் இதில் ஆர்வமாக இருக்கிறார். எமது பரம்பரை வழியாக இந்தக் கலை நிச்சயம் வாழும்.

**கே: கலைப் பயணத்தில் நீங்கள் சந்தித்த சவால்கள் மற்றும் பெற்ற நன்மைகள் என்ன?**

ப சில மாதங்களுக்கு முன்பு நான் பக்கவாத நோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்டேன். அதிலிருந்து நான் மீண்டு வந்ததே அம்மனின் அருளாலும் இந்த இசைக்கலையாலும்தான் என்று உறுதியாக நம்புகிறேன். தற்போது உடுக்கு இசைக்கக் கைகள் கொஞ்சம் தயங்கினாலும், அந்தத் தெய்வ நம்பிக்கை என்னை வழிநடத்துகிறது. பெரிய விருதுகள் எனக்குக் கிடைக்கவில்லை என்றாலும், மக்கள் என்னைப் 'பாடகர்' என்று மதிப்பதையே நான் ஆகச்சிறந்த விருதாகக் கருதுகிறேன். இதை நான் வருமானத்திற்காகச் செய்யவில்லை, இறைவனுக்குச் செய்யும் தொண்டாகவே பார்க்கிறேன்.

**கே: இன்றைய இளம் தலைமுறையினருக்கு ஒரு மூத்த கலைஞராக நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

ப எம்முடைய அடையாளமான இந்தக் கிராமியக் கலைகளை இளம் சமுதாயத்தினர் கற்க முன்வராதது எனக்கு ஒரு பெரிய ஆதங்கம். "நான் மூத்த கலைஞன், எனக்கு எல்லாம் தெரியும்" என்று எண்ணாமல், இளைஞர்களுடன் சரிசமமாக அமர்ந்து அறிவைப் பகிர்ந்துகொள்ள நான் தயாராக இருக்கிறேன். இளைஞர்கள் புதிய தேடல்களுடன் முன்வரவேண்டும். மனிதனையும் இறைவனையும் இணைக்கும் ஊடகமான இந்த இசை அதன் தன்மை மாறாமல் பாதுகாக்கப்படவேண்டும். அதுவே எனது இறுதி ஆசை.



## அந்த மரம்

பெரியமடு நிஸ்ரி

நீல வானத்தைத் தொடுமளவு
நீண்ட கிளை பரப்பி
காலம் காலமாக ஊரின்
கதை சொல்லியிருக்கும்

பூக்களின் சிரிப்பினில்
அதன் புன்னகை வனப்பினில்
பூரித்துப் போயிருக்கும்

காற்று இலைகளுடன்
காதல் பேசுகையில்
வரும் ஓசை கேட்டு
ஒரு கம்பீரம் பெற்றிருக்கும்

களைத்துப்போன பறவைகள்
கொஞ்சம் காலாற
கிளைகள் கொடுத்திருக்கும்

கொட்டும் மழையில்
கூடு நனையாமல் தன்
இலைக் கைகளால் மறைத்திருக்கும்

எச்சமிடும் பறவைக்கு
என்ன தெரியுமென்று
எதுவும் பேசாமல்
மௌனம் காத்திருக்கும்

நீண்ட தூரப் பயணத்திடை
வருபவர்கள் கொஞ்சம்
நின்றுபோக நிழல் அமைத்திருக்கும்

காதலர் தன்பெயர்
காலத்தால் அழியக்கூடாதென
முதுகையே காயமாக்கியிருக்கும்

குழந்தைகள் விளையாட
அடிக்கடி சிறு
குடிசையாக இருந்திருக்கும்

பள்ளிச் சிறுவர்களின்
புத்தகப்பையை
பாதிநாள் தானே சுமந்திருக்கும்

ஆடு மாடு மேய்ப்பவனுக்கும்
அசதி கொள்ளும் போது
அன்பாகத் தாங்கியிருக்கும்
வயது பார்த்து யார் வாய் பிளந்தது
வானளவு பரந்த மரம்

வறுமையிலும் வளர்ந்த மரம்
தனித்துவம் பெற்ற மரம்
தரித்துவிட்ட பாவமென்ன

காணி நிலம் ஆசையிலா மரத்தையே
கால்வாசி இடம்பிடிக்குதென்று
காலைத் தறித்தார்கள்

ஊரையே காத்த மரம்
கட்டடக் காடு வளர்க்க
களைச் செடியாய்ப் போனதென்ன

ஊரின் கதை சொன்ன
அந்த ஒத்த மரம் ஊமையாய்க்
கிடப்பதென்ன

பொங்கி வந்த புயலுக்குத் தப்பியது
போன வருட வெள்ளத்திற்குத் தப்பியது
கோடை வறட்சிக்குத் தப்பியது இந்தக்
கோட்டு சூட்டுப் போட்டவர்களிடம்
தப்பத் தெரியவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவு நகர் விற்பனை நிலைய திறப்பு விழா

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மட்டுவில் வடக்கு (இல.10) கிளையில் அமைக்கப்பட்ட கூட்டுறவு நகர் விற்பனை நிலைய த் திறப்பு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு இடம் பெற வுள்ளது. சங்கத்தலைவர் கு. ஜனகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அகல்யா செகராசா, சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கி. சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (சு-9)

## மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 08 . 1934



மறைவு
24 . 01 . 2026

### சுந்தரம்பிள்ளை கனகம்மா
(ஓய்வுபெற்ற பெண் பரிசாரகர்)

அன்னசத்திர லேன் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், மணல்தறை லேன் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை கனகம்மா அவர்கள் கடந்த 24.01.2026 சனிக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்ற அமிர்தலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, தியாகராசா, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சதையகுமார் அவர்களின் அன்புத் தாயாரும், விஜயமலரின் அன்பு மாமியாரும், கபிலன், ஜெனனி, விதுஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 01.02.2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கந்தையா குலசேகரம்
(பாலையா)
077 980 4048
+1514 683 7748

(CS 31098) A

## மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 03 . 1942



மறைவு
27 . 01 . 2026

### ஞானகுரு ஞானாம்பிகை (பொன்னக்கா)

கல்லை வேம்படி, சுளிபுரம் மத்தியை பிறப்பிடமாகவும், பறாளாய் வீதி, சுளிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானாம்பிகை (பொன்னக்கா) அவர்கள் நேற்று (27.01.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.50 மணியளவில் இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் ஞானகுரு (ஓய்வுபெற்ற சுகாதார உத்தியோகத்தர்) இன் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், வைத்திலிங்கம், பறுவதம் - அன்னமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினவடிவேல், சிவகாமசுந்தரி, குமாரசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பரமேஸ்வரி (ஜேர்மன்), சற்குருநாதன் (ஜேர்மன்), வைத்தியநாதன் (நீதிமன்றம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாகநாதன் (ஜேர்மனி), றஜனி (ஜேர்மனி), விபூஷனி (தொழில்நுட்பக்கல்லூரி ஆசிரியை வட்டுக்கோட்டை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜனன், அபிரா, சஸ்மிரா, சஞ்சய், சகானா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (28.01.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைப்பெற்று பூதவுடல், தகனக்கிரிகைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறுக் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மகன் - 0049 179 740 7059
மகன் - 077 234 8158, 077 937 6297
பறாளாய் வீதி, சுழிபுரம்.

(CR/46979) J-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் செல்லத்துரை தங்கராசா
(அரச விருதுபெற்ற விவசாய மன்னன்)
**Thangarajah Farm and T&T Group**



திதி - வளர்பிறை தசமி (28.01.2026)

மலர்வு
18.02.1959

உதிர்வு
07.02.2025

எங்கள் வாழ்வின் முதல் ஆசீர்வாதம் நீங்கள், அப்பா,
எங்கள் குடும்பத்தின் முதல் காவல் தெய்வம் நீங்கள்
இருப்பது ஒரு மனிதர் அல்ல -
ஒரு மரபு, ஒரு வழி, ஒரு ஒளி.
உங்கள் பெயரைச் சொன்னாலே
மனசு நேராக நிற்கிறது
உங்கள் முகத்தை நினைத்தாலே
நெஞ்சுக்கு ஒரு அமைதி பிறக்கிறது.
உங்கள் வாழ்வு முழுவதும்
மதிப்பும் ஒழுக்கமும் கலந்த ஒரு நூல்
கருணையும் கடின உழைப்பும்
சேர்ந்து நெய்த ஒரு வரலாறு.
காலை சூரியன் உதிக்கும் முன்பே
உங்கள் கைகள் வேலைக்குச் சென்றுவிடும்,
பிறர் சொல்வதற்குள்
நமக்கு தேவையானதை
நீங்கள் அமைதியாக செய்துவிடுவாய்.
செல்வத்திற்காக அல்ல,
குடும்பத்திற்காக உங்கள் உழைப்பு
புகழுக்காக அல்ல,
பொறுப்புக்காக உங்கள் பயணம்.
நாங்கள் சிரிக்க நீங்கள்
உங்கள் துக்கத்தை அடக்கினாய்,
நாங்கள் உறுதியாக நிற்க
நீங்கள் உங்கள் சோர்வை மறைத்தாய்,
நாங்கள் உயர வேண்டும் என்பதற்காக
உங்கள் வாழ்நாள் முழுவதும் உழைத்தாய்.
உங்கள் நடை கம்பீர நடை
உங்கள் பேச்சு சொற்களால் அல்ல -
குணத்தால் கற்றுத் தரும் மரியாதையின் மொழி.
எவரையும் காயப்படுத்தாமல் வாழ்ந்த
அழகான மனிதர் நீங்கள்
உங்கள் சாமர்த்தியம்,
உங்கள் அமைதி,
உங்கள் பொறுமை,
உங்கள் நேர்மை
இவை எல்லாம் இன்று
எங்களுக்கு வழிகாட்டும் விளக்குகள்.
ஒரு ஆண்டு கடந்தாலும்
உங்கள் அருகில் இல்லாத வெறுமை மாறவில்லை
ஆனால் நீங்கள் விட்டுச் சென்ற உயர்ந்த நினைவுகள்
எங்கள் இதயத்தை தினமும் தாங்கி நிற்கிறது.
இன்று எங்கள் குடும்பம் எந்த உயரத்திலும் இருந்தாலும்
அது உங்கள் ரத்தம், உங்கள் உழைப்பு, உன் வேர்கள்.
நீங்கள் பதித்த பாதையில் தான்
நாங்கள் இன்று நடக்கிறோம்.
உங்கள் புன்னகை இன்னும்
எங்களை பார்த்துக் கொண்டிருக்கிறது
உங்கள் ஆசிகள் இன்னும் எங்கள் வீட்டில் நிழலாக நிற்கிறது
உங்கள் கதை எங்களுக்கு
ஒரு பெருமையான மரபாகத் தொடரும்.
நாங்கள் உங்களை இழந்தாலும்,
நீங்கள் எங்களை ஒருபோதும் விட்டுப் போகவில்லை -
ஏனெனில் நினைவுகளுக்கு மரணம் இல்லை,
அன்புக்கு முடிவு இல்லை.
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்கள் எங்கள் அப்பாவாக மட்டும் அல்ல -
எங்கள் உயிரின் பெருமை,
எங்கள் வாழ்க்கையின் தூண்,
எங்கள் குடும்பத்தின் நிழலாகவே இருப்பாய்.
என்றும் அன்புடன்,
உங்கள் குடும்பம்

**குடும்பத்தினர்**

(CS/60577) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி மத்தியஸ்தர் சபையின் ஆண்டு நிறைவு விழா, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில், தவிசாளர் வே.செல்வகுமார் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் தென் மராட்சிப் பிரதேச செயலர் பி.ச.சத்தியசோதி, யாழ் மாவட்ட மத்தியஸ்தர் சபைகளின் இணைப்பாளர் ப.சனாதன சர்மா ஆகியோர் விருந்தினர் களாகக் கலந்துகொண்டனர்.

(க-159)



யாழ் வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பொதுச் சந்தையின் வளாகம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறைப் பிரதேசசபையால் விசேட சிரமதான நடவடிக்கை மூலம் துப்புரவு செய்யப்பட்டது. (ச-66)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.28

குப்பிழான் சொக்கவளவு சோதி விநாயகர் தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 7.20 மணி முதல் 8.35 வரையுள்ள சுபநேரத்தில் இடம்பெறவுள்ளது. பிரதிஷ்டா பிரதமகுரு புன்னாலைக்கட்டுவன் கிரியாக்ரம ஜோதி, ஆகம பிரதிஷ்டா உதயபானு சிவஸ்ரீ கிருஷ்ண பிரணவக் குருக்கள் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

கர்மாரம்பம் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 5மணிக்கும், எண்ணெய்காப்பு 5ஆம்திகதிவியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணிவரையும் இடம்பெறவுள்ளன.

(ச-41)

## வீடு வாடகைக்கு விடப்படும்

யாழ்ப்பாணம், நல்லூரிற்கு அருகாமையில் மைந்துள்ள 2 அறைகள் கொண்ட வீடு தளபாட வசதிகளுடன் மாணவர்கள், தொழில் புரிபவர்கள், நிறுவன ஊழியர்கள் குழுவாகத் தங்குவதற்கு குறுகிய கால அடிப்படையில் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0759799161/0778864868

## அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பு

மலர்வு 07 . 06 . 1938



உதிர்வு 29 . 12 . 2025

கடந்த (29.12.2025) அன்று சிவபதமடைந்த
எமது குடும்ப குலவிளக்கு

**அமரர் சபாரட்ணம் அகிலேஸ்வரி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.01.2026) புதன்கிழமை காலை 05.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும் அந்நிகழ்விலும் நாளை (29.01.2026) வியாழக்கிழமை "நுணுவில் குளக்கட்டுப் பிள்ளையாரடி இராமையா போசனசாலையில்" மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


தல்லையப்புலம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(CS/46975) J-1

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 07 . 1948



மறைவு 25 . 01 . 2026

**சேனாதிராஜா ஞானகோபாலன்**

யாழ். மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், கனடாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராஜா ஞானகோபாலன் அவர்கள் கடந்த 25.01.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், ஞானகோபால் சரஸ்வதியின் அன்பு மனைவியும், ஞானசகிலன், ஞானசந்தரின் பாசமிகு தந்தையும், கிருஸ்ணவேணி, யாழ்அரசி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரவின், அபிநயா, அகரன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான சண்முகராஜா, சிவசுந்தரராஜா, இராஜேஸ்வரி, நாகபூசணி மற்றும் சிறிஸ்கந்தராஜா, பாலசுப்பிரமணியம், மனோரஞ்சினி ஆகியோரின் சகோதரனும், தில்லையம்பலம், சண்முகநாதன், மங்கையற்கரசி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2026) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் இல.383/17, கோயில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 07 . 1954



மறைவு 27 . 01 . 2026

**ஸ்ரீவத்ஸ வை.ஜீவநாதகுருக்கள்**

காரைநகரை பிறப்பிடமாகவும், மானிப்பாய் கட்டுடையில் வசித்தவரும், தற்போது மாவிட்டபுரத்தில் வசித்துவந்தவருமாகிய ஸ்ரீவத்ஸ வை.ஜீவநாத குருக்கள் அவர்கள் நேற்று (27.01.2026) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியநாதசர்மா (வயலின்) சுலோசனாவின் அன்பு மகனும், அமரர் சாயாதேவி, திருச்செல்வி ஆகியோரின் அன்புக் கணவரும், தேவமனோகரி, ஸ்ரீரஞ்சனி ஆகியோரின் சகோதரரும், இராஜாராம் குருக்கள், ராஜ்கண்ணன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ராகினி (லண்டன்), யாழினி (அவுஸ்திரேலியா), ஜீவசௌமியா (கனடா), ஜீவசரண்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், அனந்தமூர்த்திசர்மா (லண்டன்), கணேசராஜகுருக்கள் (அவுஸ்டதிரேலியா), கேசவசர்மா (கனடா), அரவிந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜோஷிகா, ஜோஷ்ணா, தேஜஸ்வினி, அபிக்ஷனா, அக்ஷரசர்மா, ஆயுஷ்யா, ஆரார்த்தியா, அஜீஷன்சர்மா, மதுஷனா, கஜீபன்சர்மா ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2026) வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 9820 896
077 1125 461

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிவுல்...

கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில், வவுனியா வடக்கைச் சேர்ந்த பொது அமைப்புகளும், தமிழ்க்கட்சிகளும் நேற்றுக் கலந்துரையாடலில் ஈடுபட்டன. இதன் போதே, பெப்ரவரி மாதம் 2ஆம் திகதியன்று எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை போராட்டம் நடத்துவதென ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில், போராட்டத் திகதி நேற்று மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, எதிர்வரும் 2ஆம் திகதியே போராட்டத்தை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி பேருந்து நிலையத்துக்கு முன்பாக இந்தப் போராட்டத்தை முன்னெடுப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில், நாடாளுமன்ற உறுப்பினர்களான து.ரவிகரன், ப.சத்தியலிங்கம், வவுனியா வடக்கைச் சேர்ந்த சிவில் அமைப்புகள், தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ-ம-110)

## எதிர்க்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பதில் நாடாளுமன்ற செயலாளர் இடைநீக்கம் செய்யப்பட்ட விடயத்தை அடிப்படையாக வைத்து, சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரவுள்ளதாக எதிரணிகள் தெரிவித்துள்ளன. பிரதமருக்கு எதிராகக் கொண்டுவருவதாகக் கூறிய நம்பிக்கையில்லாப் பிரேரணையை இன்னமும் எதிர்க்கட்சிகள் கொண்டுவரவில்லை. இவ்வாறிருக்கையில் தற்போது சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரவுள்ளதாகக் கூறுகின்றனர்.

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு முன்னர், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருமாறு எதிர்க்கட்சியைக் கோருகின்றேன். நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரும் துணிச்சல் எதிர்க்கட்சிகளுக்கு இல்லை என்பதே உண்மை. ஆதலால், அவற்றின் நகர்வுகள் குறித்து நாங்கள் கருத்திற் கொள்ளவில்லை - என்றார். (அ-ம-44)

## குளவிக்...

முல்லைத்தீவில் தங்கியிருந்த நிலையிலேயே இந்தத் துயரச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாடசாலையில் இருந்து மகனை ஏற்றியவாறு, முல்லைத்தீவு - மாங்குளம் பழையகொலனி பகுதியில் அவர் பயணித்தபோதே, திடீரென கலைந்துவந்த குளவிகள் இருவரையும் தாக்கியுள்ளன. இதையடுத்து, உதவி பெறுவதற்காக அங்கிருந்த இரண்டு வீடுகளுக்குச் சென்றுள்ளனர். எனினும், எவரும் உதவிக்கு வரவில்லை. இதையடுத்து, பிறிதொரு வீட்டுக்கு முன்பாக இருந்த தண்ணீர் தொட்டிக்குள் குதித்துள்ளனர். குளவிகள் கலைந்து சென்ற பின்னர், அம்புலன்ஸை அழைத்துள்ளனர். சம்பவ இடத்துக்கு அம்புலன்ஸ் சென்றதும், அவர்கள் மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மேலதிக சிகிச்சையின்போது, துணுக்காய் வலயக்கல்வி அலுவலக ஆரம்பப் பாடசாலை உதவிக்கல்வி பணிப்பாளர் அன்ரனி ஜோர்ஜ் உயிரிழந்தார்.

அவருடைய மகன் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள நிலையில், அவரிடம் நேற்று இரவு பொலிஸார் வாக்கு மூலத்தைப் பதிவுசெய்துள்ளனர். அத்துடன் மேலும் இரு மாணவர்களும் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-ம-35-19)

## கூலர்...

வீதியில் நின்ற கட்டாக்காலி மாடுகளை விலகிச்செல்ல முற்பட்ட வேளையிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னாரில் இருந்து மாதவாச்சி நோக்கிப் பயணித்த கூலர் ரக வாகனமும், மதவாச்சியில் இருந்து மன்னார் நோக்கிப் பயணித்த ஜீப் ரக வாகனமுமே இவ்வாறு நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-110)

## 1,000...

உறுப்பினரும், யாழ். வணிகர் சங்கத்தின் முன்னாள் தலைவருமான இ.ஜெயசேகரன் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் உள்ள பெண் தலைமைக் குடும்பங்களை மையப்படுத்தி விசேட தொழில் வாய்ப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. புலம்பெயர்ந்து சிங்கப்பூரில் வசித்துவரும் ரி.ரி. துரை தம்பதிகள், மற்றும் சரசீஜா ராமன் ஆகியோரின் நிதியில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. கடந்தகால போர்ச் சூழ்நிலை காரணமாகவும், அண்மையில் ஏற்பட்ட புயல் அனர்த்தம் காரணமாகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கே முன்னுரிமையின் அடிப்படையில் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது.

இதன் முதற்கட்டமாக, கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் முரளிதரன் தலைமையில் 181 குடும்பங்களுக்கான உதவிகள் இன்று வழங்கப்படவுள்ளன.

இலங்கையில் பொருண்மியத்தில் நலிந்த மாவட்டங்களில் முதலிடத்தில் கிளிநொச்சி, இரண்டாவது இடத்தில் முல்லைத்தீவு, ஐந்தாவது இடத்தில் மன்னார் மற்றும் பதினோராவது இடத்தில் வவுனியா ஆகிய மாவட்டங்கள் உள்ளன. இதன் அடிப்படையிலேயே கிளிநொச்சியில் முதலாவதாக இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் என்ற ஒழுங்கில் அடுத்தகட்டத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் - என்றார். (அ-ம)

## கேப்பாபிலவு...

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொள்வதற்காக வந்த முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலிசமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகம், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் ஆகியோரிடம் இது தொடர்பான மனுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

'மக்களின் காணிகள் மக்களுக்கே என்பதே ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தின் கொள்கை. கேப்பாபிலவு மக்களின் கோரிக்கை நிச்சயம் கருத்திற் கொள்ளப்படும். மக்களின் காணிகளை மக்களிடம் ஒப்படைப்பதற்கு நாம் உரிய நடவடிக்கை எடுப்போம்' என்று மனுவைப் பெற்றுக் கொண்ட பிரதி அமைச்சர் உபாலிசமரசிங்க தெரிவித்தார். (அ-ம-35-19)

## அடாத்தாக...

பெறுகின்றது - இவ்வாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இ.விஜயகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கோம்பாவில், தேவிபுரம், சுதந்திரபுரம் போன்ற மூன்று கிராம அலுவலர் பிரிவுகளிலும் காடுகளை வகைதொகை இன்றி அழித்து, காணிகளைப் பிடிக்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக இடம்பெறுகின்றது.

போர்க்காலத்துக்கு முன்னரோ அல்லது கடந்த காலங்களிலோ அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சட்ட ரீதியான காணிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவற்றைக் கையகப்படுத்தும் நோக்கங்களோ அல்லது திட்டங்களோ இல்லை. மாறாக, காடுகளை வெட்டிக் காணிகளை ஆக்கிரமித்த நபர்களுக்கு எதிராகவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சிலர் 37 ஏக்கர் வரை காடுகளை அழித்து காணி பிடித்துள்ளனர். ஏற்கனவே வேறு இடங்களில் காணிகள் இருக்கத் தக்கதாகவும் சிலர் அந்தப் பகுதிகளில் காணிகளைப் பிடித்துள்ளனர். இத்தகைய செயற்பாடுகளை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். இவ்வாறான நபர்களுக்கு எதிரான நடவடிக்கை தொடரும்.

புதுக்குடியிருப்பில் போதிய வேலை வாய்ப்புக்கள் இல்லாமல் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா என வேறு மாவட்டங்களுக்கு இளைஞர்கள் செல்கின்றார்கள். இந்த நிலையை மாற்றுவதற்காக முதலீட்டு வலயங்களாக சில காணிகளை அடையாளப்படுத்தினோம். அங்கு பயிர்ச்செய்கை உள்ளிட்ட முதலீடுகளை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தோம். அத்தகைய காணிகளையும் அடாத்தாகப் பிடித்துள்ளனர் - என்றார். (அ-ம-19)

## காணிகளற்ற...

கும் இத்தகைய செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் - இவ்வாறு வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது:-

புதுக்குடியிருப்பு கோம்பாவில் கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட தேவிபுரம் அ, ஆ பகுதிகளில் உள்ள அரச காணிகளில் நீண்ட காலமாக நாங்கள் வாழ்ந்து வருகின்றோம். அந்தக் காணிகளில் வீடுகளையும் அமைத்து, தென்னை உள்ளிட்ட பயிர்ச் செய்கைகளையும் மேற்கொண்டுள்ளோம். ஆனால், மிக நீண்ட காலமாக எமது பயன்பாட்டில் உள்ள அந்தக் காணிகளை விட்டு வெளியேறுமாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் அண்மைக் காலமாக எம்மை வற்புறுத்தி வருகின்றது. இது தொடர்பில் சிலருக்கு எதிராக வழக்கும் தொடரப்பட்டுள்ளது. எனவே, ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் இந்த விடயம் தொடர்பில் காத்திரமான தீர்வொன்றை வழங்க வேண்டும். மாவட்டச் செயலர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் எம்மால் மனு வழங்கப்பட்டுள்ளது - என்றனர். (அ-ம-19)

## கச்சதீவுப்...

நேற்று இடம்பெற்றது. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுக் காலை 11 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மேலதிக செயலர் கை.சிவகரன், உதவி மாவட்டச் செயலர் உ.தர்சினி, நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் என்.பிரபாகரன், கடற்படை அதிகாரிகள், நெடுந்தீவுப் பிரதேசசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். திருவிழாவை நடத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் இதர ஏற்பாடுகள் தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (அ-ம-66)

## திருக்கேதீஸ்வர...

தெரிவித்தார். திருக்கேதீஸ்வர மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு, மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்னாயத்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன் பின்னர் மன்னார் மாவட்டச் செயலர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-

மகா சிவராத்திரி விழாவான பெப்ரவரி மாதம் 15ஆம் திகதியன்று, திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஐந்து லட்சம் பக்தர்கள் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கேற்ற முறையில் முன்னாயத்த நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

நீர்வழங்கல், உணவு விநியோகம், மலசலகூட வசதிகள், தடையில்லா மின்சாரம், விசேட பாதுகாப்பு, மருத்துவ முகாம் ஆகிய தொடர்பில் தனித்தனியாகக் கவனம் செலுத்தப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, பொலிஸாரின் பாதுகாப்புக்கு மேலதிகமான முறையில், முப்படைகளின் பாதுகாப்பைப் பெறுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-56-60)

## விசாரணைகளை...

தில் 'சிரிலிய' என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட கணக்கின் நிதி முறைகேடுகள் தொடர்பான விசாரணைகளுக்காகவே ஷிரந்தி ராஜபக்சவுக்கு, நிதி குற்ற விசாரணைப் பிரிவு நேற்று அழைப்பு விடுத்திருந்தது. இதையடுத்தே, விசாரணைகளை எதிர்கொள்ள அவர் இருவார அவகாசம் கோரியுள்ளார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** அனுகூலமான நாள். ஆனால்,புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரவகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும்.

**கன்னி:** கணவன் - மனைவிக்கிடையே சிறு சிறு கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர் பார்த்த உதவி கிடைப்பது இழுபறியாகும்.

**துலாம்:** இன்று பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபடவேண்டி இருக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள் வார்கள்.

**தனுசு:** உற்சாகமான நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்குமேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப் பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படக் கூடும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கை அதி கரிக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பயணத் தால் ஆதாயம் உண்டாகும்.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும்யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும்.

## கால்கோள் விழா

யாழ்ப்பாணம், ஜன.28

சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் 2026ஆம் ஆண்டுக்கான 'கால்கோள் விழா' நாளை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை முதல்வர் பாலசுப்பிரமணியம் பார்த்தீபன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் மக்கள் ஒன்றியத்தின் அறங்காவலரும் பழையமாணவருமான சிவஞானசுந்தரம் தம்பு கலந்துகொள் வார். (ச)

★★★★

யாழ்ப்பாணம், ஜன.28

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் கால்கோள் விழா நாளை வியாழக் கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதிபர் தீ.அபராஜிதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கணக்காளர் சோ.பிரபு, சிறப்பு விருந்தினராக கொடிகாமம் தேசிய சேமிப்பு வங்கியின் உதவி முகாமையாளர் பு.ரகுநந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள் ளனர். (ச-41-159)

## அபிஷேக ஆராதனை

யாழ்ப்பாணம்,ஜன.28

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் ஸ்ரீ கண்ணகையம்மன் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பிரதோச விரத அபிஷேக ஆராதனையும், எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு லலிதாசகஸ்ரகாம அர்ச்சனையும் இடம்பெறவுள்ளன. (க)

## இளம் எழுத்தாளர்களின் படைப்புகள் வெளியீடு!

யாழ்ப்பாணம், ஜன.28

பேரின்பகுமார் ஆகவி மற்றும் பேரின்பகுமார் ஆதுரி ஆகியோரின் 'பாட்டொன்றைப் பாடுவோம்' சிறுவர் பாடல் தொகுப்பு மற்றும் 'பிறந்தநாள் சட்டை' சிறுவர் கதை ஆகிய நூல்களின் வெளியீட்டு நிகழ்வு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

சிரேஷ்ட சட்டத்தரணியும் கலை இலக்கியச் செயற்பாட்டாளருமான சோ. தேவராஜா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. கர்நாடக ஆசிரியர் ஸ்ரீலேகா பேரின்பகுமாரின் எழுத்துருவில் அதிபர் க.பேரின்பகுமாரின் நெறியாள்கையில் காரைநகர் மெய்கண்டான் வித்தியாலய மாணவர்களின் 'மணிப் பூனையார்' மற்றும் சிவன் சுதனின் எழுத்துருவில், இ.ரஜிந்தனின் நெறியாள்கையில் 'அயலார் தீர்ப்பு' ஆகிய சிறுவர் நாடகங்களும், ஹரனின் எழுத்துருவில் 'நாய்கடிக்கும் கவனம்' நகைச்சுவை நாடகமும் இடம்பெறவுள்ளன. (ச-41)




## தேசிய இலக்கியப் போட்டிகளில் பச்சிலைப்பள்ளிக்கு 3 விருதுகள்

யாழ்ப்பாணம்,ஜன.28

கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆண்டுதோறும் நடத்தும்கலை இலக்கியப் போட்டிகளில், தேசியமட்டத்தில் பச்சிலைப் பள்ளி ப் பிரதேசத்துக்கு 3 விருதுகள் கிடைத்துள்ளன.

சிறுவர் பிரிவில், உதயபவன் அஸ்மிதா கையெழுத்துப் போட்டியில் முதலாம் இடத்தையும்(மாசார் அ.த.க. பாடசாலை), சிரேஷ்ட பிரிவில் தினேஸ் சாளினி பாடல் நயத்தல் போட்டியில் (நாட்டார் பாடல்) இரண்டாம் இடத்தையும் (மாசார் அ.த.க. பாடசாலை ), அதி சிரேஷ்ட பிரிவில், ஆன் சன்நேரியோ அபினாஸ் பாடல் நயத்தல் போட்டியில் (நாட்டார் பாடல்) இரண்டாம் இடத்தையும்(பளை மத்திய கல்லூரி ) பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு விருது மற்றும் சான்றிதழுடன் பணப்பரிசும் வழங்கப்பட்டது. (க-9)



திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச்சந்தி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் மஞ்சத் திருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-66)

**ஆண் வேலையாள் தேவை**

யாழ். நகரில் உள்ள செல்லப் பிராணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு ஆண் வேலையாள் தேவை.
சம்பளம் : 60000/=
தொடர்பு: 077 937 0000
(CS 311001) A

**சுன்னாகத்தில் புத்தகசாலை விற்பனைக்கு உண்டு**

50 வருட காலம் சேவையாற்றிய புத்தக நிறுவனம் ஒன்று புத்தகங்கள், கொப்பிகள் பாடசாலை உபகரணங்களுடன் கைமாறவுள்ளது.
விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
ஆச்சரியம் தரும் விலைக்கழிவு தரப்படும்.
தொடர்பு : 076 749 0219
(CR/469974) J-1

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் இலந்தைக்குளம் வீதியில் புளியம் வீதி முகப்புடன் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

- யாழ்ப்பாண பஸ் நிலையம் 3 1/2 km தூரம்.
- A-9 வீதியிலிருந்து 350 m தூரம்.
- வீடு, கடை அமைப்பதற்கு உகந்த இடம்.

தொடர்பு:- 076 860 2770
076 987 8617
(CS 30484) A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில்28.01. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.